
Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2019

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom




## இயேசுவின் ஓய்வுநாள் குணமாக்குதல்

அசுத்த ஆவி பிடித்திருந்த மனுஷன் • உலகத்தை குணப்படுத்துதல்

நடக்க முடியாத மனிதன் • சூம்பின கையுடைய மனுஷன்

குருடனாக பிறந்த மனுஷன்

குணமடைய வேண்டுமா அல்லது வேண்டாமா? • நீர் கோவையுள்ள மனுஷன்

### இயேசுவின் ஓய்வு நாள் குணமாக்குதல்

# ஆதியிலே



இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தின்போது, பலரைக் குணப்படுத்தினார். "பின்பு அவர் அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம் பேரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும் படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும், எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள். அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கியமடைந்தார்கள்.அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்." (லூக்கா 6:17-19) ஆனால் அதில் விசேஷித்த குறிப்பு என்னவென்றால், இயேசு நிகழ்த்திய குணப்படுத்துதல்கள் அனைத்தும் ஓய்வு நாளிலேச் செய்யப்பட்டது, நிகழ்த்தப்பட்டது.

நியாயப்பிரமாணத்தின் கீழ் தேவன் நிறுவின ஓய்வு நாள், இஸ்ரயேல் புத்திரருக்கு ஓய்வு கொடுக்கவும், புத்துணர்வை வழங்குவதற்கும் வடிவமைக்கப்பட்டது. கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில், முழு மனித குடும்பத்திற்கும் பெரிதான ஓய்வையும், புத்துணர்வையும் கொடுப்பதற்கு இது நிழலாக உள்ளது. இயேசு ஓய்வு நாளுக்கும் ஆண்டவராக இருந்தார். ஓய்வு நாளில் அவர் செய்த குணப்படுத்துதல், அவருடைய இராஜ்யத்தின் வேலையின் விரிவாக்கத்தை (breadth) காட்டுகிறது. இந்த பிரதி, இயேசுவின் அற்புதங்களின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அவர் ஓய்வு நாளில் செய்த குணப்படுத்தலின் மேல் கவனம் செலுத்துகிறது.

மனுக்குலத்தை, சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் தீமையான தாக்கங்களிலிருந்து அகற்றுவதன் மூலம் இராஜ்யத்தின் குணப்படுத்துதல் எவ்வாறு துவங்கும் என்பதை " அசுத்த ஆவி பிடித்த மனுஷன்" என்ற தலைப்பு காட்டுகிறது. ஆவிக்குரிய ரீதியில் பேசும் போது, மனுக்குலம் பரிசுத்தமான பெரும் பாதையில், தேவனோடு இணைந்து, பரிபூரணத்தை நோக்கி செல்லும்போது, எந்தவொரு சிங்கமோ அல்லது துஷ்ட மிருகமோ அவர்களை ஏமாற்றவோ அல்லது இடறச் செய்வதற்கோ அனுமதிக்கப்படுவதில்லை. (ஏசாயா 35:8,9)

காய்ச்சலாக இருந்த பேதுருவின் மாமியாரை இயேசு குணப்படுத்தியது, பாவ நோயிலிருந்து மனுக்குலத்தை குணப்படுத்துவதை எவ்வாறு செயல் விளக்கம் அளிக்கிறது என்று "உலகத்தை குணப்படுத்துதல்" என்ற தலைப்பு மதிப்பாய்வு செய்கிறது.

பெத்சாயிதாவின் குளத்தின் அருகில் இருந்த முடவனான மனுஷனை இயேசு குணப்படுத்துவதை, "நடக்க முடியாத மனுஷன்" என்ற தலைப்பு கண்ணோக்குகிறது. கிறிஸ்துவும் சபையும், மனுஷனுடைய உடல் ரீதியான கால் ஊனத்தையும், நீதியின் பாதையில் நடக்க இயலாமையையும் எவ்வாறு குணமாக்குவார்கள் என்பதை, அவருடைய குணப்படுத்துதல் விளக்குகிறது.

"சூம்பின கையுடைய மனிதன்" என்ற தலைப்பு ஜெப ஆலயத்தில் இயேசுவினால் சொஸ்தமாக்கின இந்த மனிதனின் குணப்படுத்தலைப் பற்றி மதிப்பாய்வுச் செய்கிறது. நீதியுள்ள செயல்களைச் செய்து, தேவனுக்கு ஏற்புடையவராக மாறுவதற்கு மனுஷனுடைய இயலாமையை எவ்வாறு இராஜ்யம் குணப்படுத்தும் என்பதை இந்த நிகழ்வு சித்தரிக்கிறது.

பிறவியிலிருந்து குருடனாக இருந்த மனுஷனை இயேசு குணப்படுத்துவதை "குருடனாக பிறந்த மனிதன்" என்ற தலைப்பு ஆராய்கிறது. மனுஷனுடைய ஆவிக்குரிய மற்றும் நேரடியான கண்பார்வை எவ்வாறு மீட்டெடுக்கப்படும் என்பதை இந்த குணப்படுத்துதல் விளக்குகிறது.

18 வருடங்களாக கூனியாக இருந்த ஸ்திரீயை இயேசு குணப்படுத்தியதை, "குணமடைய வேண்டுமா அல்லது குணமடைய கூடாதா" என்ற தலைப்பு காண்கிறது. மனுக்குலம் தங்கள் சொந்த நீதியில் தேவனுக்கு முன்பாக நிமிர்ந்து நிற்க இராஜ்யம் எவ்வாறு அவர்களுக்கு உதவிச் செய்யும் என்பதை, அவளுடைய குணப்படுத்துதல் காட்டுகிறது.

இறுதியாக, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மனுஷரின் இருதயம், தேவனுடைய பிரமாணங்களை எழுதும்படிக்கு மென்மையாகி, இதனால் மனுக்குலம் தேவனுடைய ஜனங்களாக எவ்வாறு மாறுவார்கள் என்பதை "நீர்கோவையான மனுஷன்" என்ற தலைப்பு காட்டுகிறது. (எசேக்கியேல் 36:26-28 ) இயேசுவின் பல குணப்படுத்துதல்கள், குறிப்பாக ஓய்வு நாளன்று, செய்யப்பட்ட குணப்படுத்துதல்கள், மனுக்குலத்தின் மீதான தேவனுடைய மிகுந்த அன்பை நமக்கு நினைவூட்டுவதோடு, இந்த குணப்படுத்தும் வேலையில் நாம் ஆண்டவருக்கு உதவிச் செய்யும்படியாக, நாம் பலியினால் செய்திட்ட உடன்படிக்கையில், உண்மையுள்ளவர்களாக இருக்க நம் ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கட்டும்.

**ஜூலை / ஆகஸ்ட் 2019, தொகுப்பு 101, எண் 4**

**இயேசு செய்த அற்புதங்களின் அட்டவணை**


**அசுத்த ஆவி பிடித்திருந்த மனுஷன்** 38
தீமையின் தாக்குதலை நீக்குதல்

**உலகத்தை குணப்படுத்துதல்** 42
பாவத்தினால் பாதிக்கப்பட்ட மனுஷனை குணமாக்குதல்

**நடக்க முடியாத மனிதன்** 48
நீதியில் நடக்க இயலாத மனுஷனை குணமாக்குதல்

**சூம்பின கையுடைய மனுஷன்** 52
நீதியான கிரியைகளை செய்ய இயலாத மனுஷனை குணமாக்குதல்

**குருடனாக பிறந்த மனுஷன்** 56
மனுஷனின் பார்வையை குணமாக்குதல்

**குணமடைய வேண்டுமா அல்லது வேண்டாமா?** 60
நீதியில் நிலை நிற்க இயலாத மனுஷனை குணமாக்குதல்

**நீர் கோவையுள்ள மனுஷன்** 64
மனுஷனுடைய இருதய கடினத்தைக் குணமாக்குதல்

## The Miracles of Jesus

| No. | Miracle | Type | Place | Matthew | Mark | Luke | John |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Turn water into wine | N | Cana | | | | 2:1-11 |
| 2 | Heal an official's son | H | Cana | | | | 4:46-54 |
| **3** | **Cast out spirit in synagogue** | **E** | **Capernaum** | | **1:21-28** | **4:31-37** | |
| **4** | **Heal Peter's wife's mother** | **H** | **Capernaum** | **8:14-15** | **1:29-31** | **4:38-39** | |
| 5 | First miraculous catch of fish | N | Sea of Galilee | | | 5:1-11 | |
| 6 | Cleanse a leper | H | Galilee | 8:2-4 | 1:40-45 | 5:12-15 | |
| 7 | Heal a paralytic | H | Capernaum | 9:1-8 | 2:1-12 | 5:17-26 | |
| **8** | **Heal lame man, pool of Bethesda** | **H** | **Jerusalem** | | | | **5:1-16** |
| **9** | **Heal withered hand** | **H** | **Galilee** | **12:9-14** | **3:1-6** | **6:6-11** | |
| 10 | Heal a centurion's servant | H | Capernaum | 8:5-13 | | 7:1-10 | |
| 11 | Raise a widow's son | H | Nain | | | 7:11-17 | |
| 12 | Cast out demon from blind mute | E | Galilee | 12:22-32 | | 11:14-23 | |
| 13 | Calm the storm | N | Sea of Galilee | 8:23-27 | 4:35-41 | 8:22-25 | |
| 14 | Cast spirits from man into swine | E | Gadara | 8:28-34 | 5:1-20 | 8:26-39 | |
| 15 | Heal woman, 12-year hemorrhage | H | Capernaum | 9:20-22 | 5:25-34 | 8:43-48 | |
| 16 | Raise Jairus' daughter | R | Capernaum | 9:18-26 | 5:22-43 | 8:41-56 | |
| 17 | Heal two blind men | H | Capernaum | 9:27-31 | | | |
| 18 | Cast out spirit from mute man | E | Capernaum | 9:32-34 | | | |
| 19 | Feed the 5,000 | N | Near Bethsaida | 14:13-21 | 6:32-44 | 9:10-17 | 6:1-14 |
| 20 | Walk on the water | N | Sea of Galilee | 14:22-33 | 6:45-52 | | 6:16-21 |
| 21 | Cast demon from Syroph.'s daughter | E | Region of Tyre | 15:21-28 | 7:24-30 | | |
| 22 | Heal deaf person with speech imped. | H | Decapolis | | 7:31-37 | | |
| 23 | Heal mute, crippled, blind, others | H | Galilee | 15:29-31 | | | |
| 24 | Feed the 4,000 | N | Decapolis | 15:32-38 | 8:1-9 | | |
| 25 | Heal blind man of Bethsaida | H | Bethsaida | | 8:22-26 | | |
| 26 | Cast out spirit from lunatic boy | E | Near Mt. of Trans. | 17:14-21 | 9:14-29 | 9:37-42 | |
| 27 | Find money in fish's mouth | N | Capernaum | 17:24-27 | | | |
| **28** | **Heal man born blind** | **H** | **Jerusalem** | | | **9:1-41** | |
| **29** | **Heal woman bent over for 18 years** | **H** | **Perea (?)** | | | **13:10-17** | |
| **30** | **Heal man with dropsy** | **H** | **Perea** | | | **14:1-6** | |
| 31 | Raise Lazarus | R | Bethany | | | | 11:1-44 |
| 32 | Cleanse 10 lepers | H | Betw. Sam., Galilee | | | 17:11-19 | |
| 33 | Heal blind Bartimaeus | H | Jericho | 20:29-34 | 10:46-52 | 18:35-43 | |
| 34 | Curse fig tree | N | Jerusalem | 21:18-22 | 11:12-25 | | |
| 35 | Heal Malchus' ear | H | Jerusalem | | | 22:49-51 | |
| 36 | Second miraculous catch of fish | N | Sea of Galilee | | | | 21:1-13 |

*Type of Miracles: **E**xorcism, **H**ealing, **N**ature, **R**esuscitation — Sabbath Healings in bold with green background*

### தீமையின் தாக்குதலை நீக்குதல்

# அசுத்த ஆவி பிடித்திருந்த மனுஷன்



***Russ Marten***

"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்." (ஏசாயா *35:8,9*)

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் தொடக்கத்தைப் பற்றிய விவரத்துடன் மாற்கு புத்தகம் ஆரம்பிக்கிறது. அவர் ஞானஸ்நானம் பெற்ற உடனே, வனாந்திரத்தில் 40 நாளின் அனுபவத்தை இயேசு பெற்றார். அங்கு, அவர் தம்முடைய ஊழியத்திற்காக பிதாவின் சித்தம் என்ன என்று தியானித்து, ஜெபிக்கையில், சாத்தான் இயேசுவை மயக்கவும், ஏமாற்றவும், சோதிக்கவும் வீணாக முயற்சித்தான். இந்த நேரடியான அணுகுமுறையில், தோல்வியுற்றதால், பிசாசின் அடுத்தடுத்த மோதல்களில், அசுத்த ஆவியால் பாதிக்கப்பட்டவர்கள் அடங்குவார்கள்.

இயேசு தம்முடைய ஊழியத்தின் பெரும்பகுதிக்கு, கப்பர்நகூம் பட்டணத்தின் நடுவிலும், கலிலேயாவில் சுற்றியுள்ள பகுதிகளையும், தமது நடவடிக்கைகளின் மையமாக ஏற்படுத்தினார். இயேசுவின் நற்கீர்த்தியும், துர்கீர்த்தியும் முதலில் மெதுவாக வளர்ந்தது. அவர் தனது ஊழியத்தின் முதல் ஆண்டில் (கிபி 30) பஸ்காவுக்குப் பிறகு, அவர் சிமியோன், அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை கலிலேயா கடல் கரையில் இருந்தபோது அழைத்தார். இயேசுவை பின்பற்றுவதற்கான அழைப்பை கேட்ட அவர்கள், உடனடியாக தங்கள் மீன்பிடிக்கும் தொழிலை விட்டுவிட்டு, "மனிதர்களை பிடிப்பவர்களாக" மாறினார்கள். (மத்தேயு 4:19) அந்த நான்கு பேரும் கலிலேயா கடலில் உள்ள முக்கிய துறைமுக நகரமான கப்பர்நகூமுக்குச் சென்றனர்.

கப்பர்நகூமில் உள்ள ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவி பிடித்த மனுஷனை இயேசு குணப்படுத்துவதை லூக்கா 4:31-37 மற்றும் மாற்கு 1:21-34 ஆகிய இரண்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஜெப ஆலயத்தில் இயேசுவின் போதனை**

மாற்கு 1:21,22 "பின்பு கப்பர்நகூமுக்குப் போனார்கள். உடனே அவர் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, போதகம் பண்ணினார். அவர் வேதபாரகரைப் போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்த படியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப் பட்டார்கள்."

அப்போதும் சரி, இப்போதும் சரி, இயேசு செய்த காரியம் ஒரு பொதுவான நடைமுறையை அல்ல. ஒரு அந்நியன் ஜெப ஆலயத்திற்குள் நுழைந்து, உள்ளூர் ரபிகள், மதகுருமார்களால் அழைக்கப்படாமலோ, ஊக்குவிக்கப்படாமலோ வேத வசனங்களை விளக்கத் தொடங்கினார். இன்றும் பெரும்பாலான பெரிய மதங்களில், தங்கள் சபைகளில் அந்நியரை பிரசங்கிக்க அனுமதிக்க மாட்டார்கள். இது இயேசுவின் நாட்களில் பழக்கத்தில் இல்லை. ஆனால் இயேசு வேத வசனங்களை மேற்கோள் காட்டி நியாயப்படுத்தும்போது, அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

முதலில், அங்குள்ளவர்கள் அவரது தைரியத்தைக் கண்டு திடுக்கிட்டிருக்கவேண்டும், ஆனால் பின்னர் அவருடைய போதனையைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவர் எடுத்துரைத்த பாடங்களின் தெளிவான புரிதலினால் அவர்களை கவர்ந்துக்கொள்ள, அவர் தெளிவான மற்றும் தனித்துவமான பகுத்தறிவையும், நியாயப்பிரமாணத்தின் சாட்சிகளினாலும், தீர்க்கதரிசிகளினாலும் நன்கு நிரூபிக்கப்பட்ட முடிவுகளையும் வழங்கியிருக்க வேண்டும். இதனால், அவர் கேட்போரின் மனதை நம்ப வைத்திருப்பார். அவருடைய துல்லியமான பொருள் மற்றும் உள்ளடக்கத்தைக் குறித்து வேத வசனங்கள் மௌனமாக இருக்கின்றன, ஆனால் விரைவில் அவைகளை கேட்பவரின் செயல்களுக்கு அது உதவி அளிக்கும்.

மாற்கு 1:23,24- "அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்."

அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனுஷன், நம்முடைய ஆண்டவரின் பிரசங்கத்தினால், சீற்றம் அடைவதற்கு தூண்டப்பட்டதாகத் தெரிகிறது. பாவத்தையும், இப்படிப்பட்ட அசுத்த ஆவிகளினால் பாவத்தை நடைமுறைப்படுத்தினவர்களையும், அதை ஊக்குவித்தவர்களையும் கண்டனம் செய்ததினால் இயேசு இவைகளின் சீற்றத்தை தூண்டினாரா? பாவத்தை நிராகரிக்கவும், மனந்திரும்பவும், தங்கள் சொந்த லட்சியங்களை பலிசெலுத்தவும், தேவனே அவர்களின் இருதயங்களில் உயர்ந்த விருப்பமாக இருக்க அவர்

ஜனங்களை ஊக்குவித்திருப்பாரா?

**பிசாசு பிடித்த மனுஷன் பதில் அளித்தார்**

எந்த விதமான நோக்கமாக இருந்தாலும் சரி, "ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? " என்று பிசாசு பிடித்த அந்த மனுஷன் பதில் அளித்தான். இந்த மனுஷனின் வழியாக அந்த அசுத்த ஆவி, இயேசுவின் போதனையை எதிர்த்தது.

இயேசுவின் பிரசங்கத்தின் உள்ளடக்கம், நாசரேத்தில் அவர் செய்த சொற்பொழிவுக்கு ஒத்ததாக இருந்திருக்கலாம். மேலும் பிசாசு பிடித்திருப்பதை இங்கு குறிப்பிட்டிருக்கலாம். வரவிருக்கும் இராஜ்யத்தைப் பற்றிய அவரது செய்தி, எப்போதும் மனுக்குலத்திற்கு கணிசமான அளவில் ஒரு நல்ல நம்பிக்கையை அளித்தது. ஆதாமின் வீழ்ச்சியினால் அதிகரிக்கப்பட்ட பாவம் மற்றும் தீமையின் தாக்கத்தினால், தேவனிடத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட நிலையில் உபத்திரவப்பட்ட முழு மனுக்குலமும், அவருடைய இராஜ்யத்தில் முழு விடுதலையை அனுபவிப்பார்கள். பின்னர், இராஜ்யம் இந்த உலகிற்கு கொண்டுவரும் குணப்படுத்துதலின் வல்லமையை இயேசு செயல்முறைப்படுத்தினார். அந்த இராஜ்யத்தில், சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் தீமையான தாக்கங்களும் நீக்கப்படும், மனுஷன் தம்முடைய பரலோகத் தகப்பனுடனான உறவுக்கு மீண்டும் வரவேற்கப்படுவான்.

அப்போது அசுத்த ஆவிகளினால் பிடிக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பது இயல்பான காரியமாக இருந்தது. மாற்கு ஐந்தாம் அதிகாரத்தில், ஒரு மனுஷனை விட்டு வெளியேறும்படிக்கு இயேசு ஒரு அசுத்த ஆவிக்கு கட்டளையிட்டார். (அது ஓய்வு நாளாக இராதபோதிலும்) நம்முடைய நாட்களிலும் கூட, சில மிருகத்தனமான, வன்முறை, வெறுக்கத்தக்க மற்றும் துயரமான சம்பவங்கள், மனநோயை காட்டிலும் அதிகமாக அவர்களை பிடித்த பிசாசுகளினால் ஏற்படலாம் அல்லது நேரடியாக சாத்தானால் இயக்கப்பட்டவர்களால் இவைகள் நேரிடலாம்.

இந்த அசுத்த ஆவிகளின் தாக்கங்களினால் பாதிக்கப்படும் வகையில் தேவன் மனித சிந்தையை சிருஷ்டித்தார், என்பது அதன் விளைவுகளினால் தெளிவாகிறது. எவ்வாறாயினும், பிசாசு பிடிப்பதற்கு, பிடிக்கப்படுபவரின் விருப்பமும் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளப்படவேண்டும். இதனால் அவர் முற்றிலும் குற்றமற்றவர் என்று கூற முடியாது. ஆயினும்கூட, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் அதன் பின்விளைவுகள் என்ன என்பதையும் அவர்கள் முழுமையாக புரிந்துகொண்டால் சிலர் அதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். தீய எண்ணங்கள் மற்றும் தீய பழக்கவழக்கங்களின் பொழுதுபோக்கு, ஒருவருடைய மனதையும், சரீரத்தையும், நோக்கத்தையும் தகர்த்து, அசுத்தமான மற்றும் அசுத்த ஆவிகளினால் கட்டுப்படுத்த வாய்ப்புகளை அதிகரிக்கும்.

அசுத்தமான மற்றும் அசுத்த ஆவிகளுக்கு ஒருவருடைய சித்தம், மனது மற்றும் சரீரத்தை கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்புகளை அதிகரிக்கும். தீய எண்ணங்களை ஊக்குவித்தல் மற்றும் தீய பழக்க வழக்கங்கள் பயிற்சி செய்தல் ஆகியவை உறுதியை உடைத்து, அசுத்தமான மற்றும் தீய சக்திகளுக்கு ஒருவரின் சித்தம், மனம் மற்றும் உடலின் மீதான கட்டுப்பாட்டை அதிகரிக்க வாய்ப்பளிக்கும்.

இந்த அசுத்தஆவி, மனுக்குலத்திற்கான இயேசுவின் நம்பிக்கையின் செய்தியையும், அதன் சொந்த தீர்ப்பையும் கேள்விப்பட்டதால், அதற்கு இருக்க முடியவில்லை. "எங்களை அழிக்கவா வந்தீர் ?" என்று கேட்டது. எதிர்காலத்தில் மனுக்குலத்தோடு தேவன் தொடர்புக் கொள்வதன் விளைவாக, அவர்கள் அழிக்கப் படுவார்கள், என்பதை சாத்தானும் அவனை சார்ந்த பிசாசுகளும் எதிர்ப்பார்த்ததினால், இக் கேள்வியைக் கேட்டதாக பொருள் படுகிறது. இது எப்போது சம்பவிக்கும் (இப்போதா அல்லது வருங்காலத்திலா) என்று விழுந்துபோன தூதர்களுக்கு சரியாக தெரியாததினால், இக்கேள்வி கேட்கப்பட்டதாக கருதப்படுகிறது.

அடுத்து,"மாற்கு 1:24 " என்று அந்த அசுத்த ஆவி கூறியது. மனுஷனை கட்டுப்படுத்திய அந்த அசுத்த ஆவி நம்முடைய ஆண்டவரின் நிலையை மட்டும் அல்ல, கூடுதலாக அவர் பிதாவுடன் இருப்பதையும் ஒப்புக்கொள்ளுகிறதை இந்த வாக்கியத்தின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். ஆவியைக் கண்டிப்பதில், தீய ஆவியை கீழ்ப்படியும்படிக்கு இயேசு கட்டளையிட்டார். இயேசுவின் கட்டளையை கீழ்ப்படிவதில் எந்த தாமதமும், மறுப்பும் காண்பிக்கப்படவில்லை.

**அசுத்த ஆவியை வெளியேற்றுதல்**

மாற்கு 1:25,26 -"அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார். உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனை விட்டுப் போய்விட்டது."

அவனைவிட்டு வெளியேறுவதற்கு இயேசு கட்டளையிட்டபின், அந்த அசுத்த ஆவி அவனை விட்டு வெளியேறுவதற்கும் இடையில் ஒரு குறுகிய கால அவகாசம் இருந்தது. அங்கிருந்தவர்கள் இயேசுவின் போதனையைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவருடைய வெறும் வார்த்தைகளினால், அசுத்த ஆவி வெளியேறியதை கண்ட ஜனங்கள் திகைத்துப் போயிருக்க வேண்டும். ஆவிகள் மீது அத்தகைய ஆதிக்கம் செலுத்தப்பட்டதை இதற்கு முன்பு ஒருவரும் கண்டதில்லை. ஆவி உலகத்தின் மீதான இயேசுவின் கட்டளை அசைக்க முடியாததென்று உணரப்பட்டிருக்க வேண்டும். அவரது கட்டளை எந்த ஆரவாரமும் இன்றி அல்லது எந்த அடையாளங்கள் அல்லது மர்மமான சொற்களையும் பயன்படுத்தாமல், பிறப்பிக்கப்பட்டது. ஒரு மனிதன் மீதான அசுத்த ஆவியின்

தாக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், தேவனுடைய வல்லமையை கற்பிக்கவும், கட்டளையிடவும் தேவனால் இயேசு அதிகாரம் பெற்றவர் என்று, உடனடியாக பார்வையாளர்கள் அவரை அங்கீகரித்தனர்.

இந்த ஒரு செயலினால், இயேசுவின் நற்பெயர் யூதர்கள் மற்றும் புறஜாதியாரின் மத்தியில் வேகமாக பரவியது. ஆனால் இன்னும் குணமடைய வேண்டியவைகள் இருந்தன. இயேசு அவருடைய ஊழியத்தின்போது, பல சந்தர்ப்பங்களில் அசுத்த ஆவிகளை விரட்டினார். அப்போஸ்தலர் 8:7 ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, இந்த குணப்படுத்துதலின் அவசியமும், வாய்ப்பும் தொடர்ந்தது."

## கிறிஸ்துவின் இராஜியத்தில் தீய தாக்கங்களை நீக்குதல்

முதல் ஓய்வு நாளில் நம்முடைய ஆண்டவர் நிகழ்த்திய குணப்படுத்தல், கடந்த 6000 வருடங்களின் பாவம் மற்றும் தீமையின் விளைவுகளிலிருந்து குணமடையக் கூடிய மனுக்குலத்தின் மத்தியில் நடக்கக் கூடியவைகளோடு தொடர்புடையதாக காணப்படுகிறது - மனித குடும்பத்தின் மேல், சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் தீமையான தாக்கம் நீக்கப்படும்.

ஜலப்பிரளயத்திலிருந்து, மனுக்குலத்தின் மீதான சாத்தானின் கண்ணுக்குத் தெரியாத தீய தாக்குதல்கள் மற்றும் ஒரு மனிதனின் மனதைக் கைப்பற்றி, அதை தீய ஆவியின் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பது ஆகியவை பிசாசின் கைகளில் வல்லமைமிக்க ஆயுதங்களாக இருக்கின்றது. இவைகள் மனிதனின் ஒழுக்கத்தின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியுள்ளது மற்றும் தீய செயல்களில் பங்கேற்பதை எதிர்ப்பதற்கான அவனுடைய மன திறனை குறைந்துபோக செய்தது. ஒன்று அல்லது இரண்டு தலைமுறைக்கு முன்பு தீயது அல்லது காட்டுமிராண்டித்தனமாக கருதப்பட்டவை, இப்போது "காலங்களின் அடையாளம்" என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக தோன்றுகிறது.

கிறிஸ்துவின் இராஜ்யம் மனுக்குலத்தை பூரணத்திற்கும், தேவனோடு நல்லிணக்கத்துடனும் கொண்டுவரும். ஆறில் ஒரு பகுதியிலேயே தேவன் தீமையை இழிவுபடுத்த வாய்ப்பு கிடைத்தது. இந்த திரும்புதலுக்கு, மனிதனுடைய சுற்றுப்புறசூழலில் பல மாற்றங்கள் தேவைப்படும். ஆனால் முதன்மையாக மனுக்குலத்தின் மீதுள்ள சாத்தான் மற்றும் விழுந்துபோன தீய ஆவிகளின் தாக்கங்கள் நீக்கப்படும்.

சாத்தான் மற்றும் தீய ஆவிகளின் தாக்கங்கள் இருப்பதை, மனுக்குலத்தில் பலர் மறுக்கிறார்கள். தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, சாத்தான் மற்றும் தீய ஆவிகளின் ஆட்சி முடிவுக்கு வரும் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். ஆனால் மனிதன் மீதுள்ள தீய ஆவிகளின் தாக்கங்கள் நீக்கப்பட்டு, அவர்கள் தங்களுடைய சொந்த செயல்களை செய்வதற்கு முழுமையான வாய்ப்பு கொடுக்கப்படாமல், மனுக்குலம் எவ்வாறு தங்கள் சொந்த தன்மையை வளப்படுத்துவதில் எவ்வாறு முன்னேற முடியும்? தீய தாக்கம் மற்றும் கட்டுப்பாட்டை நீக்குவதே, இராஜ்யத்தின் ஒழுங்கு முறையில் இரும்பு ஆட்சியே முதல் செயலாக இருக்க வேண்டும்.

ஆகவே, முதல் ஓய்வு நாளில் இயேசு நிகழ்த்திய குணப்படுத்துதல், தீய தாக்கம் மற்றும் தீய ஆவிகளை அகற்றிவிடுவதை செயல் முறைப்படுத்துவது இங்கு பொருத்தமாக உள்ளது. சாத்தானின் கட்டுதல், பிசாசு பிடித்தல் உட்பட பல தீய தாக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும். நன்மை எது, தீமை எது என்பதில் இனி மனுக்குலம் ஏமாற்றப் படுவதில்லை. ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் இனி ஒருபோதும் மோசமான அல்லது ஒழுக்கக்கேடான செயல்களை கனப்படுத்தாது. இதற்கு மாறாக, நன்மை, மென்மை, இரக்கம், போன்ற செயல்கள் அன்றைய செய்திகளில் ஆதிக்கம் செலுத்தும். சரி மற்றும் தவறு என்பதற்கும், இருப்பவைகளுக்கும், இல்லாதவைகளுக்கும் இடையிலான உள்ளார்ந்த மோதல்கள் நிறுத்தப்படும். போரிடும் பிரிவுகள், இன மற்றும் இனக்குழுக்கள், அரசியல் தூண்டுதல்கள், மதங்கள் மற்றும் தேசங்களுக்கு இடையிலான மோதலை சாத்தான் தூண்டுவதில்லை.

ஏதேன் தோட்டத்தில் இருந்த நம்முடைய ஆதி பெற்றோரிடம் சாத்தானின் தாக்கம் துவங்கியது. அந்த பாதிப்புகள், அதன் விளைவாக ஏற்படும் தீமையும் அன்றிலிருந்து அதிகரித்து கொண்டு வருகிறது. கடந்த ஆறாயிர வருடங்களாக, மனுக்குலம் தீமையின் பொதுவான வளர்ச்சியை அனுபவித்து வருகிறது. இந்த வாழ்க்கை செல்ல செல்ல, ஒவ்வொரு தனிநபரும், அதிகதிகமான தீமையோடு பொறுத்துக்கொண்டு வாழ கற்றுக்கொண்டுள்ளனர்.

இருப்பினும், இராஜ்யத்தின் முன்னுதாரணம் அதற்கு நேர்மாறானது. சாத்தான் மற்றும் அவனுடைய பிசாசுகளை சகிப்பது மற்றும் அனைத்து தீமைகளின் வெளிப்பாடும், மனுக்குலத்தைவிட்டு கடந்து போய்விடும். வெளிப்படுத்தல் 20 ம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில் இந்த செயல்முறை விவரிக்கப்பட்டுள்ளது. "ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்." (வெளிப்படுத்தல் 20:1-3)

மனுக்குலம் தங்களுடைய குணலட்சனங்களில் மீதியுள்ள தீமைகளை முற்றிலுமாக நீக்கி, அவர்கள் கிறிஸ்துவின் சாயலாக மாறவேண்டும் என்றால், சாத்தானின் வஞ்சகம் மற்றும் தாக்கங்கள் மட்டும் அல்ல, விழுந்துபோன அனைத்து தூதர்களின் தாக்கங்களும், பிசாசு பிடித்தலும் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

இந்த மாற்றங்களின் விளைவை ஏசாயா நமக்கு கூறுகிறார். "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையரா யிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்." (35:8-9)

சிங்கமாக சித்தரிக்கப்படும் சாத்தான். துஷ்டமிருகம் என்று சித்தரிக்கப்படும், விழுந்துபோன தூதர்கள், பரிசுத்தமான பெரும் பாதையில். மனிதனுடைய முன்னேற்றத்தை இனி ஒரு போதும் தடை செய்ய முடியாது. ஒருவேளை தனிப்பட்ட பழைய பாவங்கள் மற்றும் தீமையான தாக்கங்கள், பாரங்கள் பெரும் பாதையில் செல்வதற்கு தடையாக இருக்கலாம். ஆனால் சாத்தானாலும் தீய ஆவிகளினாலும் இனி எந்த தடையும் இருக்காது, மனுக்குலம் பெரும் பாதையில் நடந்தபின் அப்போது கட்டவிழ்க்கப்பட்ட சாத்தானால் அவர்கள் சோதிக்கப்பட வேண்டும் என்று வெளிப்படுத்தல் 20:3 வசனத்தில் உள்ள சொற்றொடர் கூறுகிறது, அது ஒரு குறுகிய காலமாக இருக்கும். அது பெரும்பாலாக உலகம் நீதியில் நடக்க மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கும் அவ்வேளையில் சம்பவிக்கும் அப்போது அவர்கள் சாத்தானின் வஞ்சனைகளைப் புறக்கணித்து தங்களுடைய பூரண நிலையை தக்கவைத்துக்கொண்டு, தேவனுடைய நித்தியமான இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள், வெளிப்படுத்தல் 20:7-10

### பாவத்தினால் பாதிக்கப்பட்ட மனுஷனைக் குணமாக்குதல்

# உலகத்தை குணப்படுத்தல்



Ernie Kuenzli

"அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார்; எகிப்தியர் கர்த்தரை அக்காலத்திலே அறிந்து, அவருக்குப் பலிகளோடும் காணிக்கைகளோடும் ஆராதனைசெய்து, கர்த்தருக்குப் பொருத்தனைகளைப்பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள்." (ஏசாயா *19:21*)

இன்று மனுக்குலம் நோய்வாய்ப்பட்டுள்ளது : (1) உடல் ரீதியாக - மரண தீர்ப்பின் கீழ் வாழ்வது ; (2) மன ரீதியாக, தேவனுடைய வழிகளுக்கு கண்மூடித்தனமாக இருப்பது மற்றும் (3) ஒழுக்க ரீதியாக, தேவனுடைய கொள்கைகளான சத்தியம் மற்றும் நீதியை அறியாதவர்களாக இருப்பது. மனுக்குலத்தை குணப்படுத்துவதே, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் நோக்கமாகும் : மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மேலும், பாவத்திற்கான விருப்பத்தையும் சம்மதத்தையும் மனுக்குலத்திலிருந்து அகற்றுவதாகும். இப்படிப்பட்ட குணப்படுத்துதல் இல்லாமல், மனிதன் மீண்டும் தேவனோடு, இணக்கமாக வந்து, நித்திய ஜீவனைப் பெற முடியாது.

"ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதியாகமம் 2:17) என்ற தேவனுடைய கட்டளையை நம்முடைய ஆதி பெற்றோர் கீழ்ப்படியாத போது, ஏதேன் தோட்டத்தில் மனுக்குலத்தின் நோய் தோன்றியது.

லூசிஃபரால் தூண்டப்படும் வரை அந்த கட்டளையை மீறுவதற்கான எந்த விருப்பமும் மனிதனிடம் காணப்படவில்லை - முதலில் ஸ்திரீயினிடம், பின்பு மனுஷனிடம். "அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது." (ஆதியாகமம் 3:4-5 ) சாத்தான் (1) தண்டனையைப் பற்றி பொய் சொல்லி, (2)அவளிடம் இல்லாத ஏதோவொன்றின் (நன்மை, தீமையைப் பற்றிய அறிவு )விருப்பத்தை தூண்டும் வரையிலும், கீழ்ப்படியக்கூடாது என்ற எந்த ஒரு விருப்பமும் ஏவாளுக்கு இல்லை. இதற்கு முன்பு ஒருபோதும் பொய் சொல்லப்படாததால் ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். தேவனுடைய கட்டளைக்கும் சாத்தானின் பொய்க்கும் இடையிலான முரண்பாட்டை ஏவாள் எதிர்நோக்கும்போது, தேவனுடைய சத்தியத்தை விட சாத்தானின் பொய்யின் மீது அவள் அதிகமான நம்பிக்கையை கொண்டிருந்தாள்.

அதற்குபின் அந்த சோதனை ஆதாமுக்கு கடந்துவந்தது. ஆதாமோ வஞ்சிக்கப்படவில்லை. (1தீமோத்தேயு 2:14). மரண தண்டனை உண்மையானது என்றும், அவர் தனது துணையான உதவியாளரை இழப்பார் என்பதையும் நன்கு அறிந்திருந்தார். தேவனுடைய வழிகாட்டுதலைத் தேடுவதற்குப் பதிலாக, அவர் தனது சொந்த பகுத்தறிவை சார்ந்திருந்தார். இந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற வழி இல்லை என்று நினைத்து, ஏவாள் இல்லாமல் வாழ்வதை விட, அவளோடு சேர்ந்து இறப்பது நல்லது என்று அவர் முடிவு செய்தார்.

பாவம் இரண்டு விஷயங்களிலிருந்து வருகிறது: முதலாவது, விசுவாச குறைவினால் தேவனுடைய கட்டளைகளை புறக்கணித்தல் மற்றும் வேறொருவரின் பகுத்தறிவை நம்பி, சார்ந்திருப்பது அல்லது சொந்த அறிவை சார்ந்திருப்பது. ஆதாம் மற்றும் ஏவாள் இதைத்தான் செய்தார்கள். ஏவாள் சர்ப்பத்தை நம்பினாள், ஆதாம் தனது சொந்த பகுத்தறிவை நம்பினார்.

பாவத்தின் இரண்டாவது காரணம் பேராசை, தேவன் வழங்காத ஒன்றைப் பெறுவதற்கான விருப்பம். ஏவாள் மற்றும் ஆதாம், இருவருமே இதை செய்தார்கள். ஏவாள் "தேவனைப் போல்" இருக்க விரும்பினாள். ஆதாம் ஏவாளை விரும்பினார். பாவத்தின் பெரும்பகுதிக்கு பேராசையே காரணம், ஒருவர் மேலுள்ள ஆசை அல்லது ஒருவருக்கு இல்லாத ஒன்றின் மேல் ஆசை.

**பாவமும், பேராசையும் சாத்தானிடமிருந்து தொடங்கியது**

பேராசை சாத்தானிடமிருந்து தொடங்கியது. "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்

என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே." (ஏசாயா14:13-14 ) லூசிபரின் பேராசை பெருமையுடன் தோன்றியது. "உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன்." (எசேக்கியேல் 28:17) லூசிபரின் பெருமை பேராசைக்கு வழிவகுத்தது, ஒரு ஆட்சிக்கான அவரது லட்சியம் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த ஆட்சியைப் பெற ஏவாளை வஞ்சிப்பதற்கு சாத்தானின் பேராசை வழி நடத்தியது மேலும் அவளுக்குள் இதேபோன்ற பேராசையை அவன் தூண்டினான்.

ஆதாமின் பாவத்தின் விளைவாக மனுக்குலம் நோய்வாய்ப்பட்டது - மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், உடல் ரீதியாகவும், இதனால் மரணம் ஏற்பட்டது. 1கொரிந்தியர் 15:21-22: "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். "ஆரம்பத்திலிருந்தே முடிவை கண்ட தேவன், சாத்தான் கீழ்ப்படியாமல், மனுக்குலத்தை சோதிப்பான் என்றும், அதனால் மனுக்குலம் விழுந்து போகும் என்றும் அவர் அறிந்திருந்தார். ஆகையால், பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய தம்முடைய நுண்ணறிவுள்ள சிருஷ்டிகள் அனைவருக்கும் இதை கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த அனுபவமாக பயன்படுத்துவதற்கு தேவன் திட்டமிட்டார். தேவனுடைய பாடம் நான்கு மடங்காக உள்ளது மேலும் (1) பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் பயங்கரமான விளைவுகள். (2) பாவத்திற்கான தேவனுடைய நீதியான தண்டனைக்கான தேவை. (3) தேவனுடைய நீதியான பிரமாணங்களின் மேல் நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கான அவசியம். (4) தேவனுடைய சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியம்.

நீதிமொழிகள் 3:5,7-8ல் சாலொமோன் இவ்வாறாக எழுதினார் : "தேவன் மனிதனுக்கு கற்பிக்கும் பாடம் இதுவே.

## மனுக்குலத்தை குணப்படுத்த தேவன் வாக்குறுதி அளித்துள்ளார்

ஏதேன் தோட்டத்திலிருந்து, மனிதன் பாவத்தின் பாடத்தையும் அதன் தீமையான விளைவுகளையும் கற்றுக் கொண்டிருக்கிறான். ஆனால் விரைவில் மனுக்குலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வழியாக, தேவனுடைய நன்மையான பாடங்களை கற்றுக்கொள்ளத் தொடங்குவார்கள். ஏசாயா 57:16-19: "நான் எப்போதும் வழக்காடமாட்டேன்; நான் என்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை; ஏனென்றால், ஆவியும், நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும், என் முகத்துக்கு முன்பாகச்சோர்ந்துபோகுமே.நான் அவர்கள் பொருளாசையென்னும் அக்கிரமத் தினிமித்தம் கடுங்கோபமாகி, அவர்களை அடித்தேன்; நான் மறைந்து, கடுங்கோபமா யிருந்தேன்; தங்கள் மனம்போனபோக்கிலே மாறுபாடாய் நடந்தார்களே. அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன். தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின்பலனைச் சிருஷ்டிக்கிறேன்; அவர்களைக் குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." மனிதன் அழிந்து போகும் வரையில், தேவன் என்றென்றும் போராட மாட்டார். மனிதனின் அநியாயம் மற்றும் பாவமான வழிகளை தேவன் காண்கிறார். ஆனால் அவர் (தூரத்தில் உள்ள) புறஜாதிகளையும், (அருகில்) உள்ள இஸ்ரயேலரையும் குணப்படுத்துவார். மனுக்குலத்தை அடையாளப்படுத்தும் எகிப்தியர்கள், குணப்படுத்துவதைப் பற்றி தீர்க்கதரிசனத்தை ஏசாயா 19:20ம் வசனம் கூறுகிறது. "அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்; ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்."பாவம் மற்றும் மரணம் தன்னை அழுத்துவதால் உலகம் அழுகிறது. அவர்களை விடுவிப்பதற்காக, தேவன் இரட்சகராகிய கிறிஸ்துவை அனுப்புவார்.

வசனம் 21:"அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார்; எகிப்தியர் கர்த்தரை அக்காலத்திலே அறிந்து, அவருக்குப் பலிகளோடும் காணிக்கைகளோடும் ஆராதனைசெய்து, கர்த்தருக்குப் பொருத்தனைகளைப்பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள்." எகிப்தியர் இனி பாவம் செய்யாதபடி, தேவனுக்கு கீழப்படிவதற்கான ஒரு பொருத்தனையை செய்வார்கள். அதை அவர்கள் செலுத்துவார்கள்.

வசனம் 22: "கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார்; அடித்துக் குணமாக்குவார்; அவர்கள்

கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்."

மனுக்குலத்தின் குணப்படுத்துதல், இயேசுவின் குணப்படுத்துதல்களால் செயல்விளக்கம் அளிக்கப் படுகிறது

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மனுக்குலம் குணப்படுத்தப்படுவதை, பழைய ஏற்பாடு முழுவதும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. அது நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியம் முழுவதிலும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மத்தேயு 4:23: "பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். "

"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்." (அப்போஸ்தலர் 10:38) என்று பேதுரு கூறுகிறார்.

இது ஜனங்களின் கவனத்தை ஈர்த்தது என்று மத்தேயு கூறுகிறார். "ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்."(மத்தேயு15:31) இயேசு நிகழ்த்திய குணப்படுத்துதல்கள், அவரை தங்களது மேசியா என்பதை வெளிப்படுத்தியது, மேலும் அவர் பிரசங்கித்த சுவிசேஷத்தை கருத்தில் கொள்ள அவர்களை வழிநடத்தியது.

**பேதுருவின் மாமியை குணப்படுத்துதல்**

லூக்கா 4:38-39 ல் இயேசு செய்த குணப்படுத்துதல்களில் பேதுருவின் மாமியார் குணப்பட்டதும் அடங்கும்."பின்பு அவர் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார், சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள். அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்."

இந்த குணப்படுத்துதலில், சம்பந்தப்பட்ட விசுவாசமானது, பேதுருவின் மாமிக்கு அல்ல, சீஷர்களின் விசுவாசத்தை பலப்படுத்துவதற்காக நடந்தது. பேதுருவின் மாமி ஒரு வகையான தொற்று நோயைப் பெற்றிருந்தாள் மேலும், அதிக காய்ச்சல் அவள் பெற்றிருந்த தொற்றுநோயின் தாக்கமாக இருந்தது. விரைவாக குணப்படுத்தப்படாவிட்டால், அதிக காய்ச்சல் அந்த நபரை கொன்றுவிடும். இதேபோன்ற முறையில், மனிதன் பாவத்தால் பாதிக்கப்பட்டதினால், அது அவனை கொல்கிறது. அதுபோல இயேசு பேதுருவின் மாமியை குணப்படுத்தாதிருந்தால், அவளையும் அது கொன்றிருக்கும்.

**கிறிஸ்துவின் இராஜியத்தில் குணபடுத்துவதற்கான அடையாளம்**

குறிப்பிடப்பட்ட இந்த சிகிச்சை, ஓய்வு நாளில் நடைபெற்றது. இது கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் நிகழும் குணப்படுத்துதலின் அடையாளமாக உள்ளது. இந்த சிகிச்சை முறை இரண்டு விதங்களில் இருக்கும்: (1) "நீ செத்து கொண்டே சாவாய்" என்ற ஆதாமின் சாபத்தை நீக்கி, மனிதனின் சொல்லர்த்தமான நோய்களை குணப்படுத்துதல். (2) பாவத்தினால் பாதிக்கப்பட்ட மனுக்குலத்தை குணப்படுத்துதல்.

கிறிஸ்துவின் இராஜ்யத்தில், மனுக்குலத்தின் சார்பாக பயன்படுத்தப்பட்டவுடன், அவர்கள் அனுபவித்த அனைத்து நோய்களும் குணமாக்கப்படும். "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்." (ஏசாயா 33:24 ) என்று ஏசாயா எழுதியதை போல, இந்த குணப்படுதல், தேவனுடைய நீதியின் பலனாக இருக்கும்.

**பாவத்தின் பாதிப்புகளை குணமாக்குதல்**

முக்கியமாக, நம்முடைய கர்த்தர் பாவத்தின் பாதிப்புகளிலிருந்து மனுக்குலத்தை குணமாக்குவார். தடைசெய்யப்பட்டதைத் தேடுவதற்கான விருப்பம் நீக்கப்படுவதினால், மனிதன் இனி ஒருபோதும் தேவனுடைய கட்டளைகளை மீறுவதற்கு முற்பட மாட்டான். ஆனால் இது எவ்வாறு செய்யப்படும் ? இந்த குணப்படுத்துதலைச் செய்ய, தேவன் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வழியாக ஐந்து நடவடிக்கைகளை எடுப்பார் என்று நாம் பரிந்துரைக்கிறோம்.

**1) தேவனுடைய கட்டளைகள் அனைவருக்கும் தெளிவுபடுத்தப்படும்**

முதலில், தேவனுடைய வார்த்தையும், கட்டளைகளும் அனைவருக்கும் தெளிவுபடுத்தப்படும். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற

அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11:9) என்று ஏசாயா கூறுகிறார். இந்த மனுக்குலம், ஏவாளைப் போல், சரி மற்றும் தவறுக்கு இடையில் குழப்பம் அடையாது. இனி ஜாதிகளை மோசம் போக்காதபடி, எதிராளி கட்டப்பட்டிருப்பான். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதை போல இந்த பூமி கர்த்தரை அறியும் அறிவினால் நிறைந்திருக்கும். இது மனிதனின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும். அவர்கள் இனி ஒருபோதும் மற்றவர்களை காயப்படுத்தவோ, அழிக்கவோ மாட்டார்கள்.

இந்த போதனையின் மூலம் எல்லா மனிதர்களும் தேவனை அறிந்துக்கொள்வார்கள். "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா 31:34)

இந்த அறிவையும் அதனுடன் தொடர்புடைய நல்வாழ்வையும் சமாதானத்தையும் தேடுவதற்கு மனுக்குலம் எவ்வாறு ஆண்டவரிடத்தில் வரும் என்பதை ஏசாயா 2:2,3 விவரிக்கிறது. "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."

### 2) மாம்சமான யாவர் மேலும் அவருடைய ஆவி ஊற்றப்படும்

பாவத்தின் பாதிப்பை குணப்படுத்த தேவன் எடுக்கும் இரண்டாவது நடவடிக்கை யோயேல் 2:28 ல் குறிப்பிடப்படுகிறது. "ஒன்றை ஒன்று நெருக்காது; ஒவ்வொன்றும் தன் தன் பாதையிலே செல்லும்; அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற் போகும்.", "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10) என்று சகரியா கூடுதலாக கூறுகிறார். சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய வார்த்தையை சபை புரிந்துக்கொள்வதற்கு தேவனுடைய ஆவி உதவி செய்கிறது போல, இஸ்ரயேலும், மனுக்குலமும் இயேசுவை மேசியாவாக அடையாளம் காண, அந்த ஆவி உதவி செய்யும்.

தேவனுடைய ஆவி ஊற்றப்படுவதைப் பற்றி ஏசாயா 32:15-17 விவரிக்கிறது: "உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும். வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருக்கும், செழிப்பான வயல்வெளியிலே நீதி தங்கித்தரிக்கும். நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்." உண்மையான நீதி, நியாயம் என்ன என்பதை தேவனுடைய ஆவி மனுக்குலத்திற்கு கற்பிக்கும். "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச் செடிகளைப்போல வளருவார்கள். ஒருவன், நான் கர்த்தருடையவன் என்பான்; ஒருவன், யாக்கோபின் பேரைத் தரித்துக்கொள்வான்; ஒருவன், தான் கர்த்தருடையவன் என்று கையெழுத்துப்போட்டு, இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக்கொள்வான்." (ஏசாயா 44:3-5 ) என்று ஏசாயா கூறுகிறார். மனுக்குலம் தங்களிடமிருந்தும், பூமிக்குரிய விஷயங்களைப் பின்தொடர்வதிலிருந்தும், பாவத்தின் நாட்டத்திலிருந்தும், தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு, தேவனுடைய ஆவி மனுக்குலத்திற்கு உதவி செய்யும்.

### 3) மனுஷனுடைய அனைத்து தேவைகளையும் வழங்கப்படுதல்

மனுக்குலத்தின் பாதிப்புகளை குணப்படுத்துவதற்கான தேவனுடைய மூன்றாவது நடவடிக்கை அவர்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதாகும். "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்;

அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்." (ஏசாயா 25:6) என்று வாசிக்கிறோம். தேவனுடைய இந்த மகத்தான நன்மை, தற்காலிகமான மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் பகட்டான விருந்து, மனிதனின் இருதயத்தின் கடினத்தன்மையை உடைக்கும். இதனால், தேவனுடைய பிரமாணம் அவர்களின் இருதயத்தில் எழுதப்படும். எரேமியா 31:12 இவ்வாறு கூறுகிறது. கூடுதலாக ,"அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன். நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 24:6,7) என்று கூறுகிறார். தேவனுடைய அபரிமிதமான நன்மை பெரும்பாலானவர்களுக்கு, பாவத்திற்கு காரணமாக இருக்கும் பேராசையை நீக்கும்.

## 4) உடல் ரீதியான சிகிச்சை மற்றும் உயிர்த்தெழுதல்

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, தேவனுடைய நான்காவது செயல் மனுக்குலத்தின் உடல் ரீதியான சிகிச்சையை உள்ளடக்கும். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." (வெளிப்படுத்தல் 21:4) என்று வாசிக்கிறோம். இந்த பூமியில் கடந்த ஆறாயிரம் ஆண்டுகளில் வாழ்ந்த மனுக்குலத்தின் பில்லியன் கணக்கான மனிதர்கள் எவ்வளவு கண்ணீர் சிந்தியிருப்பார்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். தேவன் ஒவ்வொரு சொட்டு கண்ணீரையும் கணக்கில் வைத்துள்ளார். ஒவ்வொரு சொட்டு கண்ணீரும் துடைக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கிறார்.

ஒவ்வொரு கண்ணீரும் துடைக்கப்படும் என்ற யோசனையை ஏசாயா 25:8 வில் காணலாம் : "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்." அதற்கும் மேலாக, "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5:28-29 )என்று யோவான் கூறுகிறார். இந்த உலகத்தின் மனுக்குலம், நியாயத்தீர்ப்புக்காக உயிர்த்தெழுவர் - பாவத்தை விட்டுவிடுவதற்கும், கீழ்ப்படிதலினால் பூமியில் நித்திய ஜீவனை அடைவதற்கும் ஒரு வாய்ப்பு.

அந்த உயிர்த்தெழுதல் மனுக்குலத்தின் பிந்தினோர்களிலிருந்து துவங்கும்போது, இனி ஒருபோதும் பிரிக்க முடியாதபடிக்கும், ஒவ்வொரு குடும்பங்களும் ஒன்றிணைக்கப்படுவதால் வரும் மகிழ்ச்சியை எண்ணிபாருங்கள். இதற்கான மனுக்குலத்தின் செயல் ஏசாயா சுருக்கமாக கூறுகிறார். "அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்." (ஏசாயா 25:9)

## 5) மனுக்குலத்தை பாதிக்கும் கற்களை அகற்றல்

மனுக்குலத்தை தடுமாறச் செய்த அனைத்து கற்களையும், குறிப்பாக அடக்குமுறையை அகற்றுவதே, தேவனுடைய ஐந்தாவது நடவடிக்கையாகும். இதை குறித்து ஏசாயா விவரிக்கிறார். "வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள். அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள். ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா 65:21-23, 25) கிறிஸ்துவின் இராஜ்யத்தில் புண்படுத்தவோ, தீமை செய்யவோ, ஒடுக்கவோ அல்லது

பயமுறுத்தவோ எதுவும் இருக்காது.

தேவன் இதை எவ்வாறு நிறைவேற்றுவார் என்பதை மீகா விளக்குகிறார். "அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று." (மீகா 4:3,4) கிறிஸ்துவின் மூலம் தேவன் தேசங்களை நியாயந்தீர்ப்பார், இதன் விளைவாக மனுஷன் வன்முறையைக் கைவிட்டு, அதற்கு பதிலாக அன்பை வளர்த்துக்கொள்வான். யாரும் அவர்களை பயமுறுத்தமாட்டார்கள்.

பாதை எவ்வாறு சீராகும் என்பதை ஏசாயா விவரிக்கிறார். "வாசல்கள் வழியாய்ப் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள்; ஜனத்துக்கு வழியைச் செவ்வைப் படுத்துங்கள்; பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள்; அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப் போடுங்கள்; ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்." (ஏசாயா 62:10) கிறிஸ்து ஜனங்களுக்கு வழியை செவ்வைப் படுத்துவார், பரிசுத்தமான பெரும்பாதையை உருவாக்குவார். (ஏசாயா 35:8) பாவத்தை ஊக்குவிக்கும் தடைகள் அல்லது கற்களை நீக்கி, கிறிஸ்துவின் தரத்தை - கீழ்ப்படிதலின் தரத்தை - அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பதற்காக உயர்த்தப்படும்.

இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் மனுக்குலம் பெற்றுக்கொள்ளும்போது, கீழ்ப்படிய கூடாது என்ற விருப்பத்திலிருந்து மனிதன் விடுவிக்கப்படுவான். சங்கிலியைப் போல, மனிதனின் மீதுள்ள பாவத்தின் பிடி, உடைக்கப்படும். தொடர்ந்து செய்யும் பாவத்தினால் எதையும் பெறமுடியாது, எல்லாவற்றையும் இழக்க வேண்டியதாக இருக்கும்.

நன்மை, தீமை பற்றிய துல்லியமான அறிவை மனுக்குலம் பெறுவதால், ஆதாம் மற்றும் ஏவாளை போல் இராமல், அவர்கள் தகவலறிந்து தேர்வை செய்யக்கூடும். பெரும்பான்மையானவர்கள் கீழ்ப்படிதலைத் தேர்ந்தெடுப்பார்கள். பின்னர், "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும் படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு, அவர்களுக்கு நன்மை செய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து," (எரேமியா 32:38-40)

### நீதியில் நடக்க இயலாத மனுஷனை குணமாக்குதல்

# நடக்க முடியாத மனிதன்



Jeff Earl

"இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது." (யோவான் *5:8,9*)

#### முடவனான மனுஷன் குணப்பட்ட அதிசயம்

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த வாழ்க்கை, நோய்கள், பஞ்சம், பிரசவம் உள்பட பல அபாயங்கள் நிறைந்ததாக இருந்தது. புற்றுநோய், தொற்று நோய்கள், தோல் நோய்கள் (தொழுநோய் உட்பட), ஒட்டுண்ணி நோய்த் தொற்றுகள் (parasitic infections), காசநோய், ஆந்தராக்ஸ் மற்றும் பெரியம்மை போன்ற பல, சிகிச்சை அளிக்க முடியாத நோய்கள் இருந்தன. இவற்றில் பலவற்றை இயேசு தம்முடைய ஊழியத்தின்போது சந்தித்தார். உதாரணமாக, காய்ச்சல் (யோவான் 4:46-54), தொழுநோய் (மாற்கு 1: 40-45)பக்கவாதம் மற்றும் முடக்கு வாதம் (மத்தேயு 8:6-13, யோவான் 5:3) குருட்டுத்தன்மை (மத்தேயு 9:27-31), காது கேளாமை (மாற்கு 7:32-37), சூம்பின கை (மாற்கு 3:1-5), மற்றும் பேய்பிடித்தல் (லூக்கா 4:31-36, மத்தேயு 8:28-33, 15:21-28) போன்ற வியாதிகளை இயேசு குணப்படுத்தினார். அந்த நாட்களில் மருத்துவம் பழமையானதாக இருந்தது, இருப்பினும் திறமையான யூத மருத்துவர்களால் கூட்டப்பட்ட புண்ணாற்று மருந்து மூலம் சில குறைபாடுகளுக்கு சிகிச்சையளித்திடும் திறமை உள்ளவர்களும் இருந்தனர். ஆனாலும், இந்த பயங்கரமான நோய்கள் அனைத்தையும் குணப்படுத்தும் சக்தி, பரம வைத்தியராகிய இயேசு (பின்னர் அவருடைய சில அப்போஸ்தலர்கள்) மட்டுமே பெற்றிருந்தார்.

இந்த கட்டுரை யோவான் 5: 1-10,14ல் முடவனான மனுஷனை குணப்படுத்துவதைப் பற்றியது. இந்த சம்பவம், இயேசுவின் ஊழியத்தின் இரண்டாம் வருடம், வசந்த காலத்தில், பஸ்கா பண்டிகையின் போது ஓய்வு நாளில் எருசலேமில் நிகழ்ந்தது. இந்த குணப்படுத்துதலைப் பற்றி யோவானின் சுவிசேஷத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த குணப்படுத்துதலைத் தவிர, முடக்கு வாதத்தில் அகப்பட்ட மற்ற நபர்களை இயேசு குணப்படுத்திய மூன்று நிகழ்வுகளும் உண்டு. (மத்தேயு 8:5-13, மத்தேயு 9:1-8, லூக்கா 13:10-14)

இந்த பின்னணியை மனதில் கொண்டு, யோவான் 5:1-10,14ன் குறிப்பிடப்பட்டுள்ள குணப்படுத்துதலை ஆலோசிக்கலாம் : "(1) இதற்கு பின், யூதர்களின் பண்டிகை வந்தது, இயேசு எருசலேமுக்குச் சென்றார். (2) இப்போது எருசலேமில் ஆட்டு வாசலில் ஒரு குளம் இருந்தது. எபிரெய மொழியில் பெதஸ்தா என்று அழைக்கப்பட்டது, அதில் ஐந்து மண்டபங்கள் இருந்தது. (3) இவற்றில் குருடர்கள், முடவன், போன்ற ஏராளமான வியாதியஸ்தர் இருந்தார்கள். (4) [4வது வசனம் பழமையான கையெழுத்துப் பிரதிகளில் தவிர்க்கப்பட்டுள்ளது] (5) முப்பதெட்டு வருடங்களாக வியாதிப்பட்டிருந்த ஒரு மனுஷன் இருந்தார். (6) படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி, சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். (7) அதற்கு வியாதியஸ்தன் - ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றார். (8) இயேசு அவனை நோக்கி - எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். (9)உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது. (10) ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி - இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள். (14) அதற்குபின்பு இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு - இதோ, நீ சொஸ்தமானாய் அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே என்றார். "

#### யோவான் 5:1-10,14 ன் வசன வரிகளிலான விளக்கம்

"யூதர்கள் பண்டிகையின்" போது (ஒருவேளை பாஸ்கா பண்டிகையாக இருந்திருக்கலாம்) இயேசு எருசலேமுக்கு வந்தார். (யோவான் 7:2ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அது கூடாரங்களின் பண்டிகை என்று ஒரு கைபிரதி கூறுகிறது.) பெதஸ்தா (பெத்சாயிதா அல்லது பெதஸ்தா, கையெழுத்துப் பிரதியைப் பொறுத்துள்ளது) என்பதற்கு "இரக்கத்தின் வீடு" என்று பொருள். குளத்தில் இறங்குவதற்கு காத்திருந்த நோயுற்றவர்களுக்கும், முடவர்களுக்கும் நிழல் தரும் தங்குமிடமாக இருந்த இந்த ஐந்து மண்டபங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம்."5" என்ற எண் பொதுவாக தேவனுடைய கிருபை, நன்மை மற்றும் தயவுடன் தொடர்புடைது. சில எடுத்துக்காட்டுகள் :மனிதர்களுக்கு 5 புலன்கள், ஒவ்வொரு கால்களிலும் கைகளிலும் 5 விரல்கள். தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் 5 புத்தகங்கள உள்ளது. இயேசு

தம்முடைய பிரசங்கத்தை கேட்க வந்த திரளான ஜனங்களை 5 அப்பங்களை கொண்டு போஷித்தார்.

3 ம் வசனம், திரளான நோயாளிகள், குருடர்கள், முடவர்கள் ஆகியோர் தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று குளத்தண்டையில் காத்துக்கொண்டிருந்தவர்களைப் பற்றி விவரிக்கிறது. ஏனெனில், அந்த தண்ணீர் கலக்கப்படுவதினால் அவர்களது நிலையில் சில நிவாரணங்கள் அல்லது விடுதலை கொண்டு வந்திருக்கவேண்டும். ஏனெனில் அதில் நன்மை பயக்கும் கனிமங்கள் கலந்திருக்கவேண்டும்.

பழமையான கிரேக்க கைபிரதிகளில் 4ம் வசனம் இல்லாததினால், இது திருத்தப்பட்ட வேதாகமத்தில் தவிர்க்கப்பட்டுள்ளது. ஒருவேளை இந்த குளம், ஒரு நிலத்தடி நீரூற்றின் மூலம் நிரப்பப்பட்டும், அவ்வப்போது வாயு குமிழ்கள் வெளியே வருவதை "கலக்கப்படுதல்" என்று விவரிப்பதற்காக இந்த வசனம் சேர்க்கப் பட்டிருக்கலாம்..

5ம் வசனம், நீண்ட காலமாக (38 வருடங்கள்) ஒரு மனுஷன் வியாதிப்பட்டிருந்தான் என்று விவரிக்கிறது. அவரைச் சுற்றியுள்ள பலரால் அவருடைய நிலை, நன்கு அறியப்பட்டிருக்கவேண்டும். மேலும் அவர் உண்மையில் வியாதிப்பட்டவர் என்பதற்கு இதுவே சான்றாக இருந்தது. அவர் குணமடைய வேண்டுமா என்று இயேசு 6ம் வசனத்தில் கேட்டார். இருப்பினும், வியாதிப்பட்ட அந்த மனுஷனுக்கு இயேசு என்ன கொடுக்க விரும்பினார் என்று புரியவில்லை என்று தெரிகிறது. ஏனெனில், தற்காலிகமான ஒரு நிவாரணம் பெற, அவனை குளத்தில் இறக்கிவிட ஒருவரும் உதவிக்கு இல்லை என்று அந்த மனுஷன் 7ம் வசனத்தில் குறிப்பிடுகிறான். 8ம் வசனத்தில், இயேசு அந்த மனுஷனை குணப்படுத்தினார், உடனடியாக அவன் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தனது படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான்.

அந்த குணப்படுத்துதல், இயேசுவால் ஓய்வு நாளில் செய்யப்பட்டது என்று 9ம் வசனம் கூறுகிறது. ஓய்வு நாள் ஏழாம் நாளாகும். இது ஏழாவது ஆயிர வருடத்தை அதாவது ஏழாம் நாளை அடையாளப்படுத்துகிறது. இதில் அனைவரும் தங்கள் நோய்களிலிருந்து குணமடைவார்கள்.

வியாதிப்பட்ட அந்த மனுஷன், ஓய்வு நாளில், தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தது, நியாயப்பிரமாணத்திற்கு விரோதமானது என்று முன்பு யூதர்கள் 10ம் வசனத்தில் கூறினார்கள். பின்பு, 16ம் வசனத்தில், "இயேசு இதை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகை தேடினார்கள்." மற்றொரு சந்தர்ப்பத்திலும், ஓய்வுநாளில் இயேசு குணப்படுத்தியதற்காக, அவர் பரிசேயர்களால் கடிந்துக்கொள்ளப் பட்டார். (லூக்கா13:10 ) "மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய் அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? அல்லது உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்று" இயேசு அவர்களுக்கு பதிலளித்தார். (லூக்கா 13:15,16, 14:5)

இறுதியாக, 14வது வசனத்தில், இயேசு தேவாலயத்தில் (அவர் நன்றி செலுத்தி இருக்கலாம்) அந்த மனுஷனை கண்டு, "இதோ, நீ சொஸ்தமானாய், அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே என்றார்." அந்த மனுஷனுடைய வியாதி, அவன் கடந்த காலத்தில் செய்த பாவம் அல்லது பாவங்களால் ஏற்பட்டது என்று இது கருதுகிறது. ஏனெனில், "அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி.." என்று இயேசு கூறினார். இவன் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால், வரும் மோசமான நிலையைக் குறித்ததான ஒரு எச்சரிப்பாக இருந்தது. இயேசு மற்ற மூன்று குறிப்பிட்ட நிகழ்வுகளில், இந்த நபரை மட்டுமே இவ்வாறாக அறிவுறுத்துவது குறிப்பிடப்படுகிறது.

### இஸ்ரயேல் மற்றும் மனுக்குலம், நீதியாக நடக்கத் தவறிவிட்டன

"இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." (உபாகமம் 10:12) குறிப்பிட்டுள்ளபடி, தேவனுடைய சகல வழிகளிலும் நடக்கவண்டும் என்று இஸ்ரயேலுக்கு கட்டளையிடப்பட்டது.

மோசேவின் வழியாக தேவனுடைய பிரமாணங்களை இஸ்ரயேலர்கள் முதலில் கடைப்பிடித்தாலும், பின்னர் அவர்கள் தங்கள் பெருமைகளினாலும், அண்டை நாடுகளின் விக்கிரகாராதனையின் வழிகளைப் பின்பற்றியதால், அவ்வாறு செய்யத் தவறிவிட்டார்கள். (அவர்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்கள் ஆனார்கள், யாத்திராகமம் 32:9) முதலில் இஸ்ரயேல், பின்னர் யூதா, தேவனுடைய பிரமாணங்களை எவ்வாறு மறந்துவிட்டார்கள் (அல்லது புறக்கணித்தார்கள்) என்று எரேமியா 18:15 விவரிக்கிறது. "என் ஜனங்களோ என்னை மறந்து, மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள்; செப்பனிடப்படாத பாதைகளிலும் வழியிலும் அவர்கள் நடக்கும்படி, அவைகள் அவர்களைப் பூர்வ பாதைகளாகிய அவர்களுடைய வழிகளிலிருந்து இடறும்படி செய்கிறது."

பின்னர், இஸ்ரயேல் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக, கால் ஊனமானதும் , நசல் பிடித்ததுமான மிருகங்களை பலி செலுத்தினார்கள். அதற்காக அவர்கள் கண்டிக்கப்பட்டார்கள். கால் ஊனமான ஒரு ஆட்டுக் குட்டியை ஆசாரியன் பயன்படுத்த கூடாது. உபாகமம் 15:21: "அதற்கு முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை உன் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடவேண்டாம்." மல்கியா 1: 8,14 " நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூன மானதையும் நசல் பிடித்ததையும் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்." "தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமா யிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். "என்றும் சொல்லப்படுகிறது. சிலுவையில் இயேசுவின் பரிபூரணமான ஈடுபலியைச் சித்தரிக்கும் படியாக, ஒரு பரிபூரண மிருகத்தை பலி செலுத்த வேண்டும் என்று தேவன் விரும்பினார். கூடுதலாக, இஸ்ரயேல் தங்களுடைய விக்கிரகாரதனையினால், தேவனுக்கு தங்களுடைய முதுகைக் காட்டினார்கள். முடிவாக, இஸ்ரயேலும் யூதாவும் தண்டிக்கப்பட்டார்கள். அசீரியர்களும், பாபிலோனியர்களும் அவர்களின் நிலங்களை பறித்துக்கொண்டு, அவர்களை கொன்று போட்டு, மீதியானவர்களை சிறைபிடித்து போனார்கள்.

இன்று, மனுக்குலத்தின் பெரும் பகுதி, தங்களுடைய மாம்சத்திற்கு இன்பமான காரியங்களை நடப்பித்து, வெவ்வேறு வகையான விக்கிரகாராதனையை பின்பற்றி (பணம்), "மாம்சத்தின்படி நடக்கிறார்கள்" (1தீமோத்தேயு6:10) விழுந்துபோன மனுக்குலத்தின் மற்ற பாவங்களை கலாத்தியர் 5:19-21 வரிசைப்படுத்துகிறது. இப்பிரபஞ்சத்தின் பிரபுவாகிய சாத்தானால், இந்த மனுக்குலம் பாதிக்கப்பட்டுள்ளது.

தவறை சரி என்றும் சரியை தவறு என்று கருதப்படுவதே, இன்று மிகப் பெரிய வஞ்சகமாகும். மறுபடியும் வரையறுக்கப்பட்ட பாலியல் ஒழுக்கநெறி, சட்டவிரோதமான மருந்துகளை சட்டப்பூர்வமாக்குதல், மற்றவர்களுக்கு அவதூறு செய்தல் போன்றவை இதற்கான சில எடுத்துக்காட்டுகளாகும். தேவனுடைய வார்த்தையில் உள்ள உண்மையான தரங்களுக்கு நேர்மாறான புதிய "தார்மீக தரநிலைகளுக்கு" (moral "standards) பொருந்தக்கூடிய வகையில் மனுக்குலம் வேதத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் விளக்குவதற்கும் வழிகளை தேடுகிறது. இஸ்ரயேல் மற்றும் மனுக்குலம், "தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறார்கள்." (ரோமர் 10:3) மனுக்குலம் தங்களது நடத்தையின் தரத்தை சரிபார்க்காமல், தங்கள் பார்வைக்கு சரியாக தோன்றுவதைச் செய்கிறார்கள்.

**இஸ்ரயேலும் மனிதகுலமும் எதிர்காலத்தில் நீதியாக நடக்க கற்றுக் கொள்வார்கள்**

ஆயிரவருட ஆட்சியின் ஆரம்பத்தில் சாத்தான் கட்டுவது (வெளிப்படுத்தல் 20:1-3), மனுக்குலம் நீதியான பாதையில் நடப்பதற்கு உதவியாக இருக்கும். சாத்தான் கட்டப்பட்டிருக்கும்போது, மனுக்குலத்தின் மீது எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தமுடியாது. இது தேவனுடைய சட்டங்களைக் கேட்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் மனுக்குலத்தை அதிக உற்சாகப் படுத்தும். யாக்கோபின் உபத்திரவ காலத்தின் போது, (ஏசாயா4:2-4 )இஸ்ரயேலில் மீதியுள்ள விசுவாசமுள்ள வர்களை மீட்பதோடு, கிறிஸ்துவின் வேலை (சாத்தான் கட்டப்படுவதற்கு முன்) துவங்கும். அதற்குபின் பூமியின் மேல் நடக்கும் பொதுவான உயிர்த்தெழுதலின் போது மீதியுள்ள மனுக்குலத்திற்கும் பரவும்.

எரேமியா 31:8,9 வசனங்கள் யூதர்கள், இஸ்ரயேலுக்கு திரும்புவதை விவரிக்கிறது. அதாவது கடந்த காலங்கள் தொடங்கி, அவர்கள் உயிர்த்தெழுப்பப் பட்ட பின்னரும் தொடரலாம் என்றும் குறிப்பிடப்படுகிறது. அவர்கள் நீதியின் நேரான பாதையில் நடக்கையில், கிறிஸ்துவின் உதவியைப் பெறுவார்கள்.

தேவன் இஸ்ரயேலின் சிந்தனையை மாற்றுவார் என்று எசேக்கியேல் 11:19,20 காண்பிக்கிறது. (மேலும் எசேக்கியேல் 36:26, 27 விலும் அதே காரியம் அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன் காணப்படுகிறது.)" தேவன் இஸ்ரயேலின்" கல்லான இருதயத்தை" அகற்றி அவர்களுக்கு சதையான இருதயத்தைக் கொடுப்பார். இது, தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெறுவதோடு, புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளைக் கடைப்பிடிக்க அவர்களை ஊக்குவிக்கும்.

இஸ்ரயேல், "வாசல்கள் வழியாய்ப் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள்; ஜனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்துங்கள்; பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள்; அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப் போடுங்கள்; ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்." என்று

ஏசாயா 62:10 கூறுகிறது. ஏசாயா 57:14 வும் இதே மொழியில் பரிசுத்தத்தைப் பற்றி கூறுகிறது. "வழியை உயர்த்தி உயர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி, இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள் என்னப்படும்.".

பெரும்பாதையில் நடப்பதற்கு தடையாக இருக்கும் வறுமை, அடக்குமுறை, இன வாதம், போதைப் பழக்கம் போன்ற கற்களை அகற்றுவதன் மூலம், இஸ்ரயேலுக்கும் மனுக்குலத்திற்கும் ஆண்டவரை பின்பற்றுவதற்கான வழியை அவர் எளிதாக்குவார். (ஏசாயா 26:2, 35:8காண்க)

மனுக்குலத்தின் உடல் ரீதியான சுகமளித்தலையும், முன்பு வறண்ட நிலங்கள் செழிப்பாவதைப் பற்றியும் ஏசாயா 35:6 ம் வசனம் விவரிக்கிறது. வனாந்தரங்களிலும் ஏராளமான நீரூற்றுகள் காணப்படும். "சொல்லர்த்தமான நிறைவேற்றத்தை காட்டிலும், மனுக்குலம் நீதியாக நடக்கும்படியாக, அவர்களின் யோசனைகள் திருத்தப்படுவதற்கு சத்தியத்தின் தண்ணீர் எவ்வாறு பாய்ச்சப்படும் என்பதையும் இது சித்தரிக்கிறது. இது ஏசாயா 33:15,16 வில் காண்பிக்கப்பட்டுள்ளது. "நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாத படிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ,அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்."

கூடுதலாக, இஸ்ரயேலிலிருந்து, உலகின் மற்ற பகுதிகளும், அதே ஆசீர்வாதங்களில் பங்குபெறும் என்று ஏசாயா 27:6 கூறுகிறது. "யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்." இது சொல்லர்த்தமாகவும், அடையாளமாகவும் நிறைவேறும்.

"(ஆலெப்.) கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அநியாயம் செய்வதில்லை, அவருடைய வழிகளில் நடக்கிறார்கள்." என்று சங்கீதம் 119:1-3 கூறுகிறது. தேவனைப் பின் பற்றி நடப்பவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள்.

சரியான போதனைகளைப் பெற, உடல் ரீதியாகவோ, ஆவிக்குரிய ரீதியாகவோ மனுக்குலம் எருசலேமுக்கு செல்ல விரும்புவார்கள் என்று ஏசாயா2:3 மற்றும் மீகா 4:1-4 காண்பிக்கிறது. "ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப் பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச் செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று."

தேவன் மனுக்குலத்திற்கு தேவையான எல்லா உதவிகளை அளித்தாலும், உண்மையில், சாத்தான் கட்டுப்பட்டிருந்தாலும், தீமை செய்பவர்களுக்கு தண்டனை உள்ளது என்று நீதிமொழிகள் 11:21 காட்டுகிறது. "கையோடே கைகோத்தாலும், துஷ்டன் தண்டனைக்குத் தப்பான்; நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும்." இனி தந்தையின் (அல்லது குமாரனுடைய) பாவங்களுக்காக பிள்ளைகள் தண்டிக்கப்படுவதில்லை என்றும், அவர் அவர் தங்களுடைய பாவங்களுக்காக மட்டுமே தண்டிக்கப் படுவார்கள் என்றும் எசேக்கியேல் 18:20 மனுக் குலத்தைப் பற்றி கூறுகிறது. "இராஜ்யத்தில் தேவனுடைய பிரமாணங்களை மீறுபவர்களுக்கு மிக கடினமாக இருக்கும். "அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்." என்று வெளிப்படுத்தல் 2:27 கூறுகிறது.

வியாதிப்பட்டிருந்த மனுஷனின் அற்புதமான குணப்படுத்துதலும், சுவிசேஷத்தில் உள்ள மற்ற அற்புதங்களும், ஆயிர வருட ஆட்சியில், உடல் மற்றும் ஆவிக்குரிய ரீதியில் மனுக்குலம் அனைவரையும், குணப்படுத்தும் கிறிஸ்துவின் வல்லமையின் ஒரு முன்னனுபவமாக இருந்தது. உயிர்த்தெழுப்பப்பட்ட மனுக்குலம் உடல் ரீதியாக குணமடைந்தவர்களாக எழுப்பப்படுவார்களோ அல்லது தேவனுக்கு அவர்கள் அதிகதிகமாக கீழ்ப்படியும் போது அவர்கள் படிப்படியாக குணமடைவார்களோ என்பது நமக்கு தெரியாது. எவ்வாறாயினும், மனுக்குலம் நீதியில் நடக்கும்படியாக, அவர்களது மன ரீதியான குணப்படுத்துதல், படிப்படியாக இருக்கும் என்று வேத வசனங்களிலிருந்து நாம் யூகிக்கலாம். சிலர் தவறுகளையும், சரியானவைகளையும் ஏற்கனவே அவர்கள் வாழ்ந்த முந்தைய வாழ்க்கையில் அறிந்திருப்பார்கள். ஆனால் தீமையை மட்டுமே அறிந்த மற்றவர்கள் நீதியை நேசிக்க பயிற்சி பெற வேண்டும். எந்த வழியிலும், அவர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கு இணங்க வேண்டும் அல்லது சாதகமான சூழ்நிலையில் கீழ்ப்படியாமையின் விளைவுகளை அனுபவிக்க வேண்டும்.

### நீதியான கிரியைகளை செய்ய இயலாத மனுஷனை குணமாக்குதல்

# சூம்பின கையுடைய மனுஷன்



*Rafal Niemczyk*

"அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும், அவைகளுக்கு ஆராதனைசெய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்கள். கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமுண்டாக்காமலும் இருங்கள் என்று சொல்லியனுப்பினேன்." (எரேமியா *25:6*)

சூம்பின கையுடைய மனுஷனுக்கு, அந்த கையினால் வேலை செய்ய முடியவில்லை. இந்த சம்பவத்தை கவனமாக பார்த்து, நமக்குள்ள பாடங்களை நாம் கண்டுபிடிக்கலாம். இந்த சம்பவம் லூக்கா 6:6-11, மத்தேயு 12:9-14மற்றும் மாற்கு 3:1-6 வில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

"மறுபடியும் அவர் ஜெபஆலயத்தில் பிரவேசித்தார். அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் இருந்தான். அவர் ஓய்வு நாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள். அப்பொழுது அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: எழுந்து நடுவே நில் என்று சொல்லி; அவர்களைப் பார்த்து: ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ அழிப்பதோ, எது நியாயம் என்றார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று. உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய், அவரைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடேகூட ஆலோசனைபண்ணினார்கள்." (மாற்கு 3:1-6)

**ஓய்வு நாள்**

இஸ்ரயேலர்களுக்கும், அடிமைகளுக்கும், விலங்குகளுக்கும் கூட ஓய்வு அளிக்கும் படியாக அவர்கள் அனைவருக்கும் ஓய்வு நாள் வழங்கப்பட்டது. இது தேவனுக்கும், இஸ்ரயேல் தேசத்துக்கும் இடையிலான அடையாளமாக இருந்தது. மேலும் தேவனால் தேர்தெடுக்கப்பட்ட ஜனங்களுக்கு தேவனுடைய பிரமாணத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. "நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறை தோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்." (யாத்திராகமம் 31:13) இஸ்ரயேலர்கள் தங்களுடைய உடல் உழைப்புக்கு ஓய்வு கொடுப்பதற்கு இது நேரம் வழங்கியது. "ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப் பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப் பாறவும் ஓய்ந்திருப்பாயாக." (யாத்திராகமம் 23: 12) இஸ்ரயேலர்கள் ஒருமித்து கூடவும், தங்களுடைய தேவனை தொழுதுக்கொள்ளவும், அவருடைய வார்த்தைகள் அவர்களிடம் பேசப்படுவதற்கும் இது நேரத்தை கொடுத்தது. "என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்." (லேவியராகமம் 26:2)

பத்து கட்டளைகளின் ஒரு பகுதியாக, ஓய்வுநாள் பிரமாணத்தை தேவன் இஸ்ரயேலுக்கு கொடுத்தார். "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் எருதானாலும், உன் கழுதையானாலும், உனக்கு இருக்கிற மற்றெந்த மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்; நீ இளைப்பாறுவதுபோல உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் இளைப்பாறவேண்டும்; நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்." (உபாகமம் 5:14- 15) இஸ்ரயேல் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு, அவர்களுக்கு தேவனுடைய முன்னேற்பாட்டையும் இந்த ஓய்வு நாள் பிரமாணம் சித்தரித்தது.

ஓய்வு நாளை இஸ்ரயேலர்கள் கட்டயமாக பின்பற்றும்படியாக, தேசத்திற்கு கடுமையான கட்டளைகள் கொடுக்கப்பட்டது. ஓய்வு நாளை அனுசரிக்காத போது, கடுமையான தண்டனை அதாவது மரணம் கூட தண்டனையாக கொடுக்கப்பட்டது."எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே

சேருகிற இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் அதைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டும்." (யாத்திராகமம் 31:14)

ஓய்வு நாளில் சகலமும் தடை செய்யப்படவில்லை. இந்த நாளுக்கு உணவு தயாரிப்பதில் மனைவியின் வேலை தொடர்பான கட்டுப்பாடுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஓய்வு நாளின்போது ஆசரிப்புக் கூடாரத்தில் செய்ய வேண்டிய வேலையை லேவியராகமம் 24:6-8 விவரிக்கிறது. ஓய்வு நாளில் அனுமதிக்கப்பட்ட கர்த்தருடைய ஆலயத்திற்கான வேலைகளை 2இராஜாக்கள் 11:7 குறிப்பிடுகிறது. ஓய்வு நாளின் உண்மையான நோக்கத்தை காண்பிக்கும்படியாக இயேசு அடிக்கடி பேசினார்: "பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப் படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்." (மாற்கு 2:27-28)

### ஓய்வு நாளைக் குறித்து பரிசேயர்களின் பார்வை

ஓய்வு நாள், தேவன் இஸ்ரயேலருக்கு கொடுத்த கருணையின் பரிசு என்று பரிசேயர்கள் புரிந்துகொள்ள வில்லை. அவர்கள் இரக்கத்துடனும், அன்புடனும் நியாயப் பிரமாணத்தைப் படிக்காததால், அவர்களால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. லூக்கா 13:15-16 வில் இயேசு அவர்களுக்கு விவரித்த போதும் கூட, அவர்கள் அதை புரிந்துகொள்ள தவறிவிட்டார்கள். "கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார்."

இதற்கிடையில், ஓய்வுநாளில், 18 வருடங்களாக முடங்கிப் போன பெண்ணை இயேசு குணப்படுத்துவதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் மகிழ்ச்சி யடைந்தார்கள். "அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப் பட்டார்கள். ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப் பட்ட சகல மகிமையான செய்கைகளைக்குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்." (லூக்கா 13:17)

### கைகள் கிரியைகளை சித்தரிக்கிறது

கைகள், மனித வேலைகள் மற்றும் நோக்கங்கள், இரண்டையும் குறிப்பதாக வேதாகமம் காட்டுகிறது. சுத்தமான கைகள் சுத்தமான கிரியைகளை பரிந்துரைக்கிறது. (சங்கீதம் 24:3-4) அதே நேரத்தில், இரத்தம் படிந்த கைகள், பாவச் செயல்களைக் குறிக்கிறது. (ஏசாயா 1:15) தலையின் மேல் மடக்கி வைக்கப்பட்டிருக்கும் கைகள், விரக்தி மற்றும் சோகத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. (எரேமியா 2:37) தேவனிடம் உயர்த்தப்படும் கை, பரலோகத் தகப்பனுக்கு வழங்கப்பட்ட மரியாதைக்குரிய செயலாகும். வலது கையை உயர்த்துவது தேவனுடைய சித்தத்திற்கும், சத்தத்திற்கும் உள்ள அதிகாரத்தை காட்டுகிறது. (வெளிப்படுத்தல் 10:5)

### விழுந்துபோன மனுஷன் நீதியான கிரியைகளை நடப்பிக்க முடியாது

வியாதியும், வலியும் மரண தீர்ப்பின் ஆதாரம் :"ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதியாகமம் 2:17) ஆதாம் மற்றும் ஏவாள் இந்த கட்டளையை கீழ்ப்படியாததால், "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." (ரோமர் 5:12) ஆதாமின் தீர்ப்பினால், "அக்கினிப் பொறிகள் மேலே பறக்கிறதுபோல, மனுஷன் வருத்தம் அனுபவிக்கப் பிறந்திருக்கிறான்." (யோபு 5:7)

பாவத்தின் விளைவாக, அனைவரும் அசுத்த மாகவும், அபூரணர்களாகவும் இருக்கிறார்கள். அனைவரும் அபூரணர்களாக இருப்பதால், ஒருவரும் நீதியான கிரியைகளை நடப்பிக்க முடியாது. "பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால் அது தீட்டுப்படுமோ என்று ஆகாய் பின்னும் கேட்டான்; அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத் தரமாக: தீட்டுப்படும் என்றார்கள். அப்பொழுது ஆகாய்: அப்படியே இந்த ஜனங்களும் இந்த ஜாதியாரும் என் சமூகத்தில் இருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களுடைய கைகளின் எல்லாக் கிரியைகளும் அப்படியே இருக்கிறது; அவர்கள் அங்கே கொண்டுவந்து படைக்கிறதும் தீட்டுப் பட்டிருக்கிறது." (ஆகாய் 2:13-14) என்று ஆகாய் விவரிக்கிறார்.

பிரமாணத்தின் கீழ், இஸ்ரயேல் வெளிச்சம் இன்றி இருக்கவில்லை. நீதியான செயல்கள் என்ன என்பதையும், அநீதியானவைகள் எது என்பதையும் இது அவர்களுக்கு கற்பித்தது. இந்த பிரமாணம் நீதியுள்ள பாதையை காண்பித்தது, ஆனால் அந்த பாதையில் நடப்பதுமிக கடினமாக இருந்தது. "இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே

தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." (ரோமர் 3:20) விழுந்துபோன இனத்தின் உறுப்பினராக இருக்கும், இஸ்ரயேலின் அபூரணம் மற்றும் பாவத்தின் பாதிப்புகள், பிரமாணத்தை பரிபூரணமாக கடைப்பிடிக்கவும், தேவனுக்கு நீதியுள்ள செயல்களை நடப்பிப்பதற்கும் இயலவில்லை அல்லது சாத்தியமாக்கவில்லை. ஒழுக்க ரீதியாக முதிர்ச்சி அடைந்த ஒவ்வொரு இஸ்ரயேலரும், அவர் ஒரு பாவி என்பதை அறிந்திருந்தார். நம்முடைய ஆண்டவரை தவிர வேறு எந்த யூதரும் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கவில்லை.

இஸ்ரயேலர்கள் தங்கள் கைகளின் செயல்களால் ஆண்டவரை கோபப்படுத்தினார்கள் என்று எரேமியா எழுதுகிறார். (எரேமியா 44:8) அந்நிய தேவர்களுக்கு தூபம் காட்டுவது, விக்கிரகங்களை உருவாக்குவது மற்றும் வன்முறை ஆகியவை இதில் அடங்கும். (எரேமியா 1:16, 44:8) "இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் தங்கள் சிறுவயதுமுதல் என்பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்து வந்தார்கள்; இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபத்தையே உண்டாக்கி வந்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 32:30) அவர்களுடைய கிரியைகள், இயேசு குணமாக்கிய சூம்பின கையுடைய மனுஷனுடைய கிரியைகளை போலிருந்தது.

இஸ்ரயேல் நியாயப்பிரமாணத்தை சரியாகக் கடைப்பிடிக்க முடியவில்லை. ஆனால் அவர்கள் அதை கடைப்பிடிப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் மிகவும் குறைவாக காணப்பட்டதே, தேவனை கோபப்படுத்தியது. ("அப்பொழுது அவன்: இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன், அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார் என்று சொன்னான்.") (2இராஜாக்கள் 22:17) தீர்க்கதரிசிகள் மற்றும் ஞானிகளை தேவன்அவர்களிடம் அனுப்பி, அவர்களின் ஊழியத்தின் மூலம் இஸ்ரயேலை சீர்ப்படுத்த முயன்றார். (மத்தேயு 23:34) ஆனால் இஸ்ரயேலரோ, அவர்களின் ஆலோசனையை தள்ளிவிட்டு, இயேசுவாகிய அவர்களுடைய மேசியாவை புறக்கணித்தார்கள். "ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேத பாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்; நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள். இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு23:34-36)

ஆனால் தேவன் இந்த வளர்ச்சியை முன்னறிந்தவராக, அவருடைய இரட்சிப்பின் திட்டத்தில் அதற்கான ஏற்பாடுகளையும் செய்தார். அவர் தம்முடைய ஜனங்களை நித்தியமாக புறக்கணிக்காமல், எதிர்காலத்தில் அவர்களுக்கு மிக பெரிய கிருபையை ஏற்பாடு செய்தார். "மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டு மென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதி யாருடைய நிறைவுஉண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு, விலக்குவார் என்றும்;" (ரோமர் 11:25-26)

கலிலேயா கடலின் புயலை அமைதிப்படுத்தினவரும், இயற்கையின் வல்லமைகளின் மீது அதிகாரம் கொண்ட அவரே அந்த இரட்சகர். அவர் தம்முடைய பூமிக்குரிய இராஜ்யத்தில் இஸ்ரயேலையும், மனுக்குலத்தையும் அவர்களின் எல்லா நோய்களிலிருந்தும் குணப்படுத்துவார். இதில் அனைவரும் குணப்படுத்தப்படுவார்கள். இதனால் அவர்கள் அனைவரும் தேவனை ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான செயல்களைச் செய்வார்கள். சூம்பின கையுடைய மனுஷனை குணப்படுத்தியது, கிறிஸ்துவின் இராஜ்யத்தில், இந்த பெரிதான குணப்படுத்துதலின் சித்திரமாக உள்ளது.

## கிறிஸ்துவின் இராஜ்யத்தில் குணப்படுத்துதற்கான சித்திரம்

"என்று அப்போஸ்தலர் பவுல் கொலோசேயர் 2:16-17ல் எழுதினார். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கீழ், இஸ்ரயேலுக்கும், முழு மனுக்குலத்திற்கும் ஒரு மிக பெரிய ஓய்வு நாளை இந்த ஓய்வு நாள் சித்தரிக்கிறது. முழு சிருஷ்டிப்பும் இந்த நாளுக்காக ஏங்குகிறது. "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இது வரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தின வராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" (ரோமர்8:22,21) முழு சிருஷ்டிப்பும் இப்போது துன்பப்பட்டுக் கொண்டு, அவர்களுக்கு அந்த மிக பெரிய ஓய்வு நாள் கொண்டுவரும் (பாவம்) மீட்புக்காகவும், அவர்களின் (அடிமைத்தனம் மற்றும் தீமை) விடுதலைக்காகவும் காத்திருக்கிறது. "கர்த்தர் உன் துக்கத்தையும், உன் தத்தளிப்பையும், நீ அடிமையாக்கப்பட்டிருந்த கடினமான அடிமைத்தனத்தையும் நீக்கி, உன்னை

இளைப்பாறப்பண்ணும் அக்காலத்திலே," (ஏசாயா 14:3) இந்த வாழ்க்கையில் அனைவரும் அனுபவித்த பாவம், துக்கம், பயம் மற்றும் மரணம் ஆகியவற்றின் அடிமைத் தனத்திலிருந்து, தேவன் இஸ்ரயேலுக்கும், முழு மனுக் குலத்திற்கும் ஓய்வு கொடுப்பார்.

"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" (எசேக்கியேல் 36:26) தேவன் முன்னேற்பாடாக வழங்கப்படும் மன்னிப்பின் வழியாகவும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் முதலில் இஸ்ரயேலின் மீதும், பின்னர் மனுக்குலத்தின் மீதும், ஊற்றப்படும் ஆசீர்வதங்க ளினாலும், தேவன் மனிதனின் கல்லான இருதயத்தை, மாம்சமான இருதயமாக மாற்றுவார்." (எசேக்கியேல் 36:29-30) பின்னர், தேவன் இந்த புதிய இருதயத்தை அவருடைய ஆவியால் நிரப்புவார், இது அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து, நியாயத்தீர்ப்புகளை கடைப்பிடிக்க அவர்களை ஊக்குவிக்கும். "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின் படி செய்யவும் பண்ணுவேன்." (எசேக்கியேல் 36:27)

இது தேவனை சேவிப்பதற்கும், அவருடைய நீதிக்கும் நேராக மனுஷனுடைய மனப்பான்மையை திருப்பும். அவர்கள் செய்த தவறுகளை அவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள், இதற்காக அவர்கள் வெட்கப்படுவார்கள்."அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங் களினிமித்தமும் உங்கள் அருவருப்பு களினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள்." (எசேக்கியேல் 36:31). வரலாறு முழுவதிலும், இஸ்ரயேல் தேவனை எவ்வளவு தோல்வியுறச் செய்தது என்பதை உணரும்போதும், அவர்கள் தங்களை தாழ்த்துவார்கள். பின்னர் தேவன் அவர்களுடன் பணியாற்றவும், எவ்வாறு நீதியாக செயல்பட வேண்டும் என்பதையும் அவர்களுக்கு அவர் கற்பிப்பார்.

மறுசீரமைப்பின் காலங்களின் போது, நீதியில் வளர்ச்சி அடைவதற்கு, மனுஷன் தழுவ வேண்டிய ஒரே காரியம் - தாழ்மை. "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயமஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்."(மீகா 6:8) தேவனோடு தாழ்மையுடன் நடந்துகொண்டு, நீதிக்கு ஏற்ப செயல்பட்டு, மற்றவர்களுக்கு கருணை காட்ட விரும்புவது ஆகியவை தேவனுடைய பிரமாணத்திற்கு இணங்க செய்யும். அப்போது மனுஷனின் இருதயத்தில் என்ன எழுதப்படும்? நிச்சயமாக, பழைய ஏற்பாட்டின் கடுமையான எழுத்துக்கள் அல்ல, மாறாக, "புது உடன் படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது." (2கொரிந்தியர் 3:6) இந்த பிரமாணத்தின் ஆவியே எழுதப்பட்டிருக்கும். யூத தலைவர்கள் நியாயப் பிரமாணத்தின் எழுத்துக்களை மட்டுமே கண்டுணர்ந்தார்கள், மேலும் குறிப்பாக பல நூற்றாண்டுகளாக மனுஷருடைய பாரம்பரியங்கள் அதில் சேர்க்கப்பட்டது.

ஆனால் இப்படிப்பட்ட பாரம்பரியங்கள் இல்லாத, இந்த புதிய பிரமாணம், ஜனங்களின் இருதயங்களில் எழுதப்படும். அடுத்த யுகத்தில் தேவனுடைய பிரமாணம், நேசிப்பதற்கும், அதை கற்பிப்பதற்கும் வழிநடத்தும். "போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்ன வென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்."(மத்தேயு 22:36-40) "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்." (யாக்கோபு 2:8) இந்த பிரமாணம், மனுக்குலம் நன்மை செய்வதற்கும் உதவி செய்யும், அதை தடுக்காது.

தேவன், அவருடைய ஒரே பேறான குமாரனாகிய லோகோஸை "அனைவரையும் மீட்கும்பொருளாக" மரிக்கக்கொடுத்து, இந்த உலகத்தை இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். (1தீமோத்தேயு2:6) இவ்வாறாக, இயேசு சுவிசேஷ யுகத்தில் சபைக்கும், ஆயிரவருட யுகத்தின் போது முழு உலகிற்கும் இரட்சிப்பை அளிக்கிறார். கிறிஸ்துவின் இராஜ்யத்தில், நீதியுடன் செயல் படுவதற்கு, அவர் இஸ்ரயேலுக்கும், மனுக்குலத்திற்கும் கற்பிப்பார். இதனால் அவருக்கு கீழ்ப்படியக்கூடிய சூம்பின கையுடையவர்கள் அனைவரின் கைகளும் குணமாகும்.

**"எந்த ஒரு அன்பின் செயலும், அது எவ்வளவு சிறிதானாலும் சரி, அது என்றுமே வீணாகாது."**

மனுஷனின் பார்வையை குணமாக்குதல்

# குருடனாக பிறந்த மனுஷன்

"பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே." (யோவான் *9:32*).



***Ray Charlton and Nicholas Charcharos***

பிறவி குருடனால் இந்த அறிக்கை கொடுக்கப் பட்டது. இயேசு நிகழ்த்திய ஒரு அற்புதத்தின் மூலம் அவர் சற்று முன் தனது பார்வையைப் பெற்றார். இதனால் இயேசு ஒரு பாவி என்று பரிசேயர்கள் கூறியதால் அவர் இயேசுவின் தற்காப்புக்காக வந்தார். அதற்கு முன், அந்த பிறவி குருடன் "அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கே யிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்." (யோவான் 9:30) என்று கூறி அவர்களுக்கு சவால் விட்டார். இந்த மோதலுக்கான காரணம் என்ன? இந்த கேள்விக்கான பதிலை காண, இந்த அற்புதத்திற்கு வழிவகுத்தது என்ன என்பதை நாம் பார்க்கவேண்டும்.

**அமைப்பு**

கூடார பண்டிகையின் போது இயேசு பரிசேயர் களுடனும், சாதாரண யூதர்களுடனும் பேசிக் கொண்டிருந்தார். அவர் ஆலயத்திற்குள் சென்றபோது, இந்த தச்சன் வேத வசனங்களை எவ்வாறு புரிந்துக்கொள்ள முடிந்தது என்று அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். (யோவான் 7:15) அந்த வார்த்தைகள் அவருடையவை அல்ல, அவரை அனுப்பியவரின் வார்த்தைகள் என்று அவர் பதிலளித்தார். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் படி நடப்பவர்கள் என்று கூறிக்கொள்வதால், பிதாவின் சித்தத்தைச் செய்யும்படி அவர் சொன்னார். (யோவான் 7:17) ஆனாலும், அவரைக் கொல்ல அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். (வசனம் 19) ஓய்வு நாளைப் பற்றி அவர்களது நோக்கத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார்: அவர்கள் ஓய்வுநாளில் ஒரு குழந்தையை விருத்தசேதனம் செய்வார்கள், ஆனால் ஓய்வுநாளில் அவர் குணப்படுத்தினதற்காக குற்றம் சாட்டினார்கள்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்டவர் களிடையே இயேசு ஏற்படுத்திய பிரிவுகளை அப்போஸ்தலன் யோவான் காட்டுகிறார். அவரைக் கைது செய்ய அனுப்பப்பட்ட ஆலயத்தின் அதிகாரிகள் திரும்பி வந்து கூறியது: "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள். அப்பொழுது பரிசேயர்: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?" (யோவான் 7:46-48)

மறுநாள், தேவாலயத்தில் இயேசு தன்னைப் பற்றிப் பேசின போது அந்த காட்சி தொடர்ந்தது, "மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்." (யோவான் 8:12) "உன்னைக்குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்." என்று அவர்கள் இயேசுவிடம் சவாலிட்டபோது, "இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப் பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. நான் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவனா யிருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார் என்றார்." என்று இயேசு பதில் அளித்தார். (யோவான் 8:13,17-18) பொதுவாக பரிசேயர்கள் மாம்சத்திற்குரிய கண்களைப் பயன்படுத்தியதால், இயேசு சொன்ன ஆவிக்குரிய காரியங்களை அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை.

"ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்." (யோவான் 8:28) என்று இயேசு மேலும் கூறினார். ஆடம் கிளார்க் கருத்துரையின்படி: "நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு--நீங்கள் என்னை சிலுவையில் அறைந்து, உங்கள் அக்கிரமங்களின் அளவை நிரப்பும்போது, அவைகள் பின் வரும் அறிகுறிகளால், நானே கிறிஸ்து என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். மேலும், தொடர்ந்து வரும் தீர்ப்பினால், நான் பேசியது உண்மை என்று நீங்கள் அறிந்து கொள்வீர்கள். யூத எழுத்தாளர்கள் இடையில், இறப்பதற்கோ, கொல்லப் படுவதற்கோ அல்லது சிலுவையில் தொங்க விடப்படுவதற்கோ, "உயர்த்தப்படுதல்" என்ற சொற்களை பொதுவாக பயன்படுத்துவது வழக்கம்.

"இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்." (யோவான்8:30) என்று அப்போஸ்தலர் யோவான் குறிப்பிடுகிறார். "நம்முடைய ஆண்டவரின் பிரசங்கத்தை கேட்ட வரையறையற்ற ஏராளமான ஜனங்கள் மீது

எப்போதும் இரண்டு எதிர் விளைவுகளைத் தூண்டியது. இது ஒரு வகுப்பாரை ஈர்த்தது, மற்றொரு வகுப்பாரை விரட்டியது." என்று யோவான் 8:30ஐ குறித்து பாஸ்டர் ரசல் எழுதினார். (மறுபதிப்பு 3153). விசுவாசித்த யூதர்களை இயேசு ஊக்குவித்தார். "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்." (யோவான் 8:31-32) ஆனால் ஏசாயா 6:9கூறியது எவ்வளவு உண்மையாக இருந்தது. "அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல்."

பெரும்பாலான யூதர்கள் மந்த செவியும், மங்கலான கண்களை உடையவர்களும், ஆவிக்குரிய புரிதல் இல்லாதவர்களுமாக இருந்தார்கள். "அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்க வில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்."(யோவான் 8:33) என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் உண்மையில், அவர்கள் ரோமுக்கு ஊழியம் செய்தார்கள், ஆதாமினால் அவர்கள் பாவத்திற்கு அடிமைகளாகவும், நியாயப்பிரமாணத்தின் கீழ் கண்டனம் செய்யப்பட்டவர்களுமாக இருந்தார்கள். ஆபிரகாம் என் நாளை கண்டு களிக்கூர்ந்தார் என்று இயேசு சொன்னபோது அவர்களுடைய குழப்பம் மேலும் அதிகரித்தது - ஆபிரகாம் ஈசாக்கை தேவனிடம் ஒப்புக்கொடுத்து, அவரை திரும்ப பாவனையாக பெற்றுக்கொண்ட அந்த நாள். (எபிரெயர் 11:17-19) பின்னர் இயேசு மனிதனாக வருவதற்கு முன்னிருந்த லோகோஸ் நிலையைக் குறித்து பேசுகையில், அவர்கள் அவரைக் கல்லெறியும் அளவுக்கு கடும் கோபமடைந்தார்கள். (யோவான் 8:59)

**பிறவி குருடன் குணப்படுதல்**

சீலோவாம் குளம் எருசலேமில் இருந்ததாலும், அது குருடனை குணப்படுத்தும் செயல் முறையின் ஒரு பகுதியாக இருந்ததினாலும், முந்தைய இரண்டு அதிகாரங்களின் நிகழ்வுகள் முடிந்த உடனேயே இந்த அற்புதம் நடந்திருக்கவேண்டும் என்று யோவானின் கூற்றின்படி தோன்றுகிறது.

குறைபாடுள்ளவர்களின் மீது இயேசு கொண்டிருக்கும் அக்கரையை இந்த நிகழ்வு காட்டுகிறது. மற்றவர்கள் அந்த குருடனை பார்ப்பதை தவிர்த்து விரைவாகச் சென்றபோது, இயேசு அவரை கண்டார். சீஷர்களின் எதிர்வினை விநோதமாக தோன்றலாம். "அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்."(யோவான் 9:2) பாவத்தின் விளைவே, எல்லா வகையான பேரழிவுகளுக்கும் காரணம் என்ற ஒரு பொதுவான உலகளாவிய கருத்து யூதர்கள் மத்தியில் அந்நேரத்தில் காணப்பட்டது. எனினும், இயேசு இதற்கு விளக்கம் அளித்தார் -"இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்." (யோவான் 9:3 ) இயேசு செய்யவிருந்த பணி, அவருடைய பிதாவினால் அவருக்கு கொடுக்கப்பட்ட பணிகளில் ஒன்றாகும். (வசனம் 4)

அவர் இறப்பதற்கு ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன் இந்த குணப்படுத்துதல் நிகழ்ந்தது. நேரம் குறைவாக இருப்பதை இயேசு அறிந்திருந்தால், உடனடியாக அவர் வேலைச் செய்ய வேண்டியதாக இருந்தது. "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்." (யோவான் 9:5) என்று அவர் சீஷர்களுக்கு நினைவுப் படுத்தினார்.

இயேசுவின் பல அற்புதங்கள் பெற்றுக் கொள்பவரின் தரப்பில் விசுவாசம் தேவைப்பட்டாலும், இது அவற்றில் ஒன்று அல்ல என்று தோன்றுகிறது. குருடன் குணமடைவதற்கு எந்தவிதமான விண்ணப்பங்களும் ஏறெடுக்கப்படவில்லை. "இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி: நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்."(யோவான் 9:6,7 ) அந்த மனிதன் குணமடைவதற்கு, இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை குறிப்பிடும்படியாக, அவருடைய அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டியதாக இருந்தது. அவர் தெருவில் பிச்சை எடுப்பதைக் கண்டவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதை பார்க்க முடிந்தது.

**தொடர்ந்து வந்த சர்ச்சை**

முன்பு பார்வையற்றவராக இருந்தவரை, ஜனங்கள் பரிசேயர்களிடம் கொண்டு வந்தார்கள். "இவர்கள் பிரதான ஆட்சியைக் கொண்டிருந்தன, மேலும் ஜனங்கள் மத்தியில் உள்ள அனைத்து கருத்து வேறுபாடுகளையும் தீர்மானித்தன, மதத்தின் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களின் தீர்ப்பே இறுதியானது. அந்த மனிதன் குணமடைந்துவிட்டார் என்று முழுமையாக நம்பிய ஜனங்கள், இது எவ்வாறு செய்யப்பட்டது என்பதையும், அது சட்டப்பூர்வமாக செய்யப்பட்டுள்ளதா என்பதையும் அவர்களே தீர்மானிப்பதற்கு அவரை பரிசேயர்களிடம் அழைத்து வந்தார்கள்." (Adam Clarke)

"இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது. ஆகையால்

பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வை யடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன்: அவர் என் கண்களின் மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான். அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வு நாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர்: பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினை யுண்டாயிற்று. மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்."(யோவான் 9:14-17)

பரிசேயர்களின் ஆவிக்குரிய குருட்டுத்தன்மை வெளிப்படையானது. அற்புதத்தைக் குறித்து எந்த விதமான ஆச்சரியமும் காட்டப்படாமல், அவர் மேல் குற்றம் சாட்டினார்கள் - "அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறு சிலர்: பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினை யுண்டாயிற்று." (யோவான் 9:16) வேதபாரகர்களை பொருத்தவரை, அவர் ஓய்வு நாள் பிரமாணத்தை மீறி விட்டார். அவர்களின் பார்வையில், அவர் சேற்றை உண்டாகியது, ஒரு வேலையாக கருதப்பட்டது. இந்த ஒரு பார்வை கேலிக்குரியதாகத் தோன்றினாலும், இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் எதிராக இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவது இதுவே முதல் முறை அல்ல. (மாற்கு2:23-34) "அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர்: பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று."(யோவான் 9:16) என்று மற்றவர்கள் இயேசுவை பாதுகாக்க வந்தனர். "அவர் ஒரு தீர்க்கதரிசி" என்று அந்த மனுஷன் கூறினார். விரோதிக்கும் பரிசேயர்களின் மத்தியில் இந்த மனுஷன் என்ன ஒரு உதாரணமாக இருக்கிறார். அவர் இயேசுவுக்காக நிற்க அஞ்சவில்லை.

இருப்பினும், பரிசேயர்கள் குருடரின் வார்ததையை ஏற்க மறுத்தார்கள். அவர் பிறப்பிலிருந்து பார்வையற்றவராக இருந்தாரா என்று அவர்கள் பெற்றோரிடம் கேள்வி எழுப்பினர். அவர் பார்வையற்றவராக பிறந்தார் என்பதை பெற்றோர்கள் உறுதிப்படுத்தினாலும், பரிசேயர்களின் வல்லமைக்கு அஞ்சியதால் அவர்கள் அதில் ஈடுபடுவதைத் தவிர்த்தார்கள். யாராவது இயேசுவை கிறிஸ்து என்று ஒப்புக்கொண்டால், அவர்கள் ஜெப ஆலயத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று யூதர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். ஆனாலும் அந்த குருடர் அவர்களுக்கு சவாலிட தயாராக இருந்தார். "அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம். பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிற தில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தி யுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்ட தில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்."(யோவான் 9:30-33)

அப்போது பரிசேயர்களின் பாசாங்குத்தனம் தெளிவானது. "அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்."(யோவான் 9:34 ) அவர்களது சொந்த பாவங்களை காணாத குருட்டுத்தன்மை, இயேசுவின் வார்த்தைகளில் காட்டப்பட்டுள்ளது. "நீ உன் கண்ணி லிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (லூக்கா 6:41) பார்வையற்றவர் முன்பே வெளியேற்றப் பட்டதை அறிந்த இயேசு, "அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமா யிருக்கும் படிக்கு அவர் யார் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்." (யோவான் 9:35-38) என்று கேட்டார்.

### ஆவிக்குரிய குருட்டுத்தன்மை

தங்கள் கண்களுக்கு முன்பாக நிரூபிக்கப்பட்ட அற்புதங்களுக்கு இந்த மத தலைவர்கள் எப்படி இவ்வளவு குருடர்களாக இருக்க முடியும்? மேசியாவின் வருகையைக் குறித்து முன்னறிவிக்கப்பட்ட வசனங்களை அவர்கள் படித்திருந்தார்கள். அவருடைய வருகையை எதிர்பார்த் திருந்தார்கள். (லூக்கா3:15) இன்னும் அவர்கள் கண்ட அடையாளங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இனி வரக்கூடிய கிறிஸ்துவின் ஆயிரவருட இராஜ்யமாகிய, பெரிய ஓய்வு நாளில் செயல்படபோவதை அவர்கள் இப்போது கண்டார்கள். ஆயிரம் ஆண்டாகிய

பெரிய ஓய்வு நாள், ஆறாயிரம் ஆண்டு பாவத்திலிருந்து மனுஷனுக்கு ஓய்வு தரும். இது யேகோவா தேவனைப் பற்றி கற்றுக்கொள்வதற்கும், மனுக்குலத்திற்கு பாவத்தினால் ஏற்பட்ட விளைவுகளை உணர்ந்துக்கொள்வதற்கும் ஒரு காலமாக இருக்கும்.

பரிசேயர்களால் ஏன் பார்க்க முடியவில்லை என்று அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறார். "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." (2 கொரிந்தியர் 4:3,4) ஏசாயா 60:2 ல் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டபடி பெரும்பாலான யூதர்களின் கண்கள் மட்டும் அல்ல, மனுக்குலத்தின் கண்களும் குருடாக்கப் பட்டிருந்தது. "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்."

பெரும்பாலான ஜனங்களின் கண்கள் குருடாக்கப் படுவதை யெகோவா தேவன் சாத்தானை அனுமதித்தது நியாயமற்றதாகத் தோன்றினாலும் (2கொரிந்தியர் 4: 4 ) அதற்கான நியாயமான காரணங்கள் உண்டு. ஆதாமின் பாவத்தின் காரணமாக, கிறிஸ்து மரிக்கவேண்டியது அவசியமாக இருந்தது. தேவனுடைய ஞானத்தில் மனுஷனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வெளிப்படையான நோக்கத்தை இந்த குருட்டுத்தன்மை மறைத்தது என்று பவுல் கூறுகிறார். ""(1கொரிந்தியர் 2:8)

## "இந்த மனிதனும் பாவம் செய்யவில்லை, அவன் பெற்றோரும் பாவம் செய்யவில்லை"

மனுக்குலத்தை பாதித்த பல நோய்களுக்கு ஆதாமின் வீழ்ச்சியே காரணமாக உள்ளது. பாவம் உலகிற்குள் நுழைந்ததும், மனுக்குலம் தொடர்ந்து தேவனுடைய சட்டங்களுக்கு கீழ்ப்படியவில்லை. மன ரீதியான மற்றும் உடல் ரீதியான பிரச்சனைகள் மனிதகுலத்தை பாதிக்கத் தொடங்கியது.

ஆயிர வருட யுகத்தில், மனுக்குலம் உயிர்த்தெழுந்து, அவர்கள் பெற்ற ஆதாமின் பாவங்கள் துடைத்தெறியப்படும் போது, அவர்கள் பெறும் ஆரோக்கியத்தை (குணப்படுத்துதல்) இந்த குருட்டு மனிதன் சித்தரிக்கிறான். அதற்குபின் மனிதன் ஆவிக்குரிய குருடனாக இருக்கமாட்டான், அவன் யேகோவா தேவனை புரிந்துக்கொண்டு அவரை ஆராதிப்பான்.

மனுக்குலத்தின் குருட்டுத்தன்மையைப் பற்றியும், ஆயிர ஆண்டு காலத்தில் உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய குருட்டுத்தன்மை நீக்கப்படும் என்ற வாக்குறுதியைப் பற்றியும் ஏசாயா எழுதியிருக்கிறார். "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்." (ஏசாயா 60:2)

ஆயிரவருட யுகத்திற்கான வாக்குறுதி : "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம்."(ஏசாயா 35:5) இதன் தாக்கத்தை, "அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்; குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்." ஏசாயா 29:18-19 விவரிக்கிறது இந்த உலகம் சகலத்தைக் கண்டு பரிந்துக் கொள்வதற்குமான காரணத்தை யோவேல் 2:28 அளிக்கிறது: "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்."

இஸ்ரயேல் தேசத்திற்கு ஒரு அற்புதமான செய்தி உள்ளது: "நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்." (ஏசாயா 42:6-7)

## சுருக்கம்

உடல் ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் குருடனாக பிறந்தவனுக்கு, ஒளியைக் கொடுப்பதற்கு, இயேசுவே "இந்த உலகின் ஒளியாக" இருந்தார். வரவிருக்கும் யுகத்தைப் பற்றிய ஒரு சித்திரத்தில் இயேசு உடனடியாக அந்த மனிதனை குணப்படுத்தவில்லை. அவர் அந்த மனிதனின் கண்களில் சேற்றைப் பூசி, அதை கழுவும்படிச் சொன்னார். "இயேசு உண்டாகின சேறு மற்றும் அங்கு பயன்படுத்தப்பட்ட தண்ணீர், இரண்டுக்கும் குறிப்பான எந்தவித முக்கியத்துவமும் இல்லை. இது குருடனின் நம்பிக்கைக்கு ஒரு உதவியாக மட்டுமே இருந்தது. ஆனால் அது அவருடைய மனதில் எந்த சிகிச்சையும் அளிக்கவில்லை. பரிசேயர்களை போலவே இது ஒரு அற்புதம் என்பதை அவர் உணர்ந்தார்."(Reprint 4149). என்று பாஸ்டர் ரசல் கூறினார். ஆயிரவருட ஆட்சியிலும் இதே தான் நடக்கும். என்ன செய்ய வேண்டும் என்று மனுக்குலத்திற்குச் சொல்லப்படும், பின்னர் அவர்கள் நீதியைப் பெற்றுக்கொள்ள, அறிவுறுத்தலைப் பின்பற்ற வேண்டும்.

"குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்"(ஏசாயா42:16)

**நீதியில் நிலை நிற்க இயலாத மனுஷனை குணமாக்குதல்**

# குணமடைய வேண்டுமா அல்லது குணமடைய வேண்டாமா?



**David Christiansen**

"அப்பொழுது பதினெட்டு வருஷமாய்க் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்." (லூக்கா *13:11*)

அது ஒரு ஓய்வு நாளாக இருந்தது. இயேசு தேவாலயத்தில் போதித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்; அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள்." என்று லூக்கா 13:1 கூறுகிறது. மாறுபாடான இந்த காரியத்தை கண்ட யூதர்களுக்கு இது ஒரு வேதனையான அனுபவமாக இருந்திருக்கும், மேலும் அவர்களுக்கு உதவிச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் இயேசுவை நோக்கினார்கள்.

அந்த பக்தியுள்ள யூதர்களுக்கு, பெரும்பாலும் அவர்கள் சொந்தமாக கற்றிராத, அவர்கள் விரும்பும் படிப்பினைகளை கற்பிப்பதற்கான வாய்ப்பை இயேசு பயன்படுத்தினார். அவர் கலிலேயர்களிடம் சில எதிர்பாராத கேள்விகளைக் கேட்டார். இது மிகவும் பயனுள்ள கற்பிக்கும் நுட்பமாக இருக்கலாம்.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ" (லூக்கா 13:2) என்று இயேசு கேட்டார். இந்த கேள்வியானது, கலிலேயர்கள் செய்த பாவங்களுக்காக, தேவன் அவர்களை தண்டித்ததினால் பிலாத்துவினால் அந்த கொலைகள் நடந்தது என்று யூதர்களை அறிவுறுத்தியது.

இருப்பினும், அந்த கலிலேய யூதர்கள் ஆராதிக்கும் போதும், பலியிடும்போதும் கொலை செய்யப்பட்டதால், அவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக தேவனால் தண்டிக்கப்படுகிறார்கள் என்று அர்த்தமல்ல, என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது.

இது யோபின் அனுபவத்தை போன்றது. யோபு தேவனை நேசித்த பக்தியுள்ள ஒரு மனுஷன். ஆனாலும் கூட சாத்தான் யோபுவை சோதிக்க தேவன் அனுமதித்தார். தேவன் யோபுவை, அவர் குடும்பத்தினாலும் செல்வத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரே காரணத்தினாலே, அவர் தேவனை வணங்கினார் என்று சாத்தான் குற்றம் சாட்டினான். யோபுவிடமிருந்து சகலத்தையும், அவர் பிள்ளைகளையும் கூட எடுத்துச் செல்ல தேவன் சாத்தானை அனுமதித்தார். எப்படியிருந்தாலும், யோபுவின் மனைவியும் அவருடைய சில நண்பர்களும் தேவனைச் சபிக்க தூண்டினாலும் யோபு தேவனை மறுதலிக்கவில்லை. யோபு வேதனைகளை சகிக்கவேண்டும் என்று தேவன் ஒரு காலத்தை அனுமதித்ததால், அவர் ஏதோ தவறு செய்துவிட்டார் என்றும், அதற்காக தண்டிக்கப்படுகிறார் என்றும் அர்த்தமல்ல. உண்மை அதற்கு நேர்மாறாக இருந்தது. அதை மனதில் கொண்டு, ஜெப ஆலயத்தில் உள்ள இயேசுவிடம் நம் கவனத்தைத் திருப்பலாம்.

**பெண்ணை முடக்கிய பலவீனம்**

இயேசுவின் அதிசயமான அற்புதங்களில் ஒன்றை லூக்கா 13: 10-17 விவரிக்கிறது. ஓய்வுநாளில் ஒரு ஜெப ஆலயத்தில் கற்பித்தபோது, "பலவீனப்படுத்தும் ஒரு ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ" இயேசு கவனித்தார். "அப்பொழுது பதினெட்டு வருஷமாய்க் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்." (வசனம் 11) அவர் உடனடியாக அந்த பெண்ணின் மீது இரக்கம் காட்டினார். இந்த நோய் இன்றும் உள்ளது மற்றும் பார்கின்சன் நோய் மற்றும் ஸ்கோலியோசிஸ் போன்ற பிற நோய்களுடன் நெருக்கமாக தொடர்புடையது.

இந்த நோய்க்கு இன்று பயன்படுத்தப்படும் பெயர், பென்ட் ஸ்பைன் சின்ட்ரோம் (Bent Spine Syndrome (BSS)) இந்த வியாதி வலியோடு தொடர்புடையதாக உள்ளது. இந்த பெண்ணின் நோய், அதன் அறிகுறிகள் மற்றும் பதினெட்டு ஆண்டுகளில் அவள் அனுபவித்த வேதனை எவ்வளவு என்பதையும் இயேசு அறிந்திருந்தார். ஆகையால் அவள் இயேசுவின் கவனத்தை ஈர்த்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை.

இரக்கத்தை காட்டுவதில் இயேசு நேரத்தை வீணாக்கவில்லை. அவளை அவர் ஜெப ஆலயத்தில் கண்டவுடனே, அவளை அழைத்து, "" என்று அவர் கூறினார். மேலும் "இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலை யாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்." (லூக்கா 13:12,13) அந்த ஸ்திரீ தேவனை மகிமைப்படுத்தியதால், அங்கு நம்பமுடியாத மகிழ்ச்சயான ஒரு காட்சியை நாம் கற்பனை

செய்யலாம். பதினெட்டு வருட துன்பம் திடீரென்று முற்றிலுமாக முடிந்தது.

இந்த நிகழ்ச்சியில் நமக்கு சில படிப்பினைகள் உள்ளது. முதலாவது, இயேசு ஜெப ஆலயத்தில் போதித்துக் கொண்டிருக்கையில் அந்த ஸ்திரீயை கண்டார். வந்திருந்த ஜனக்கூட்டத்திற்கு அவருடைய வார்த்தைகளினால் பாடங்களை கற்பிப்பதை காட்டிலும், இந்த ஒரு ஸ்திரீக்கு உதவி செய்தால், அதிகமான பாடங்களை அவர்களுக்கு கற்பிக்கலாம் என்று இயேசு கண்டார். இந்த நிகழ்ச்சி நடந்த நேரம் சரியானதாக இருந்தது. முழு சபையும் இந்த அற்புதத்தை காணும்படிக்கு நம்முடைய பரலோகத் தந்தை ஜெப ஆலயத்தின் ஆராதனையில் ஒரு தடையை ஏற்பாடு செய்தார். இயேசு தனது பிரசங்கங்கள் முடியும் வரை காத்திருக்கவில்லை. அதற்கு பதிலாக, அவர் அந்த ஸ்திரீயை அழைத்து,"".

"இந்த மருந்துகளை ஒரு நாளைக்கு மூன்று முறை சாப்பிட்டு, ஒரு வாரத்திற்கு பின் என் அலுவலகத்தில் என்னை வந்து பாருங்கள், விஷயங்கள் மேம்பட்டுள்ளதா என்று பார்ப்போம்" என்று இயேசு அவளிடம் கூறவில்லை." "இயேசுவிடம் அவள் நடந்து சென்ற நேரத்தில், அவர் அவள் மேல் கைகளை வைத்தவுடன், அவள் நோயிலிருந்து முற்றிலும் குணமடைந்தாள். இயேசு அந்த இடத்திலேயே அந்தப் பெண்ணை குணப்படுத்தினார். சலக மாம்சத்தின் மேல், மொத்த வல்லமையையும் தேவன் அவருக்கு கொடுத்திருந்தார். ஆகையால் அவர் பலரின் வியாதிகளை அவர் குணப்படுத்தினார். இதன் விளைவாக ஜெப ஆலயத்திலிருந்த பலர் இயேசுவை பின்பற்றினார்கள் என்று நாம் கற்பனை செய்யலாம்.

நோயால் பாதிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசு தன் கையை நீட்டி தொட்டு குணப்படுத்தினாலும், அவள் யெகோவா தேவனை மகிமைப் படுத்தினாள் இயேசு தன்னை குணப்படுத்தியதற்காக அந்த ஸ்திரீ சந்தோஷப்பட்டு, அவரை புகழ்ந்திருந்தால், இந்த கதை சரியாக இருந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை, அதற்கு மாறாக, இயேசுவே சகலத்தையும் செய்திருந்தபோதிலும், தேவனை மகிமைப்படுத்தும் போது இயேசு புறக்கணிக்கப் பட்டார்.

அந்நாளில், யூதர்கள் யேகோவா தேவனைத் தவிர வேறு யாரையும் புகழ்வதைக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கூடுதலாக இயேசு தேவனுக்கே எல்லா மகிமையையும் கொடுக்கக்கூடிய ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். பழைய ஏற்பாட்டின் சம்பவங்கள், ஒவ்வொரு தலைமுறைகளுக்கும் வழிவழியாக அனுப்பப்பட்டதால், தேவனுடைய வல்லமையின் மூலமாக தீர்க்கதரிசிகள் செய்த அற்புதங்களைப் பற்றி இஸ்ரயேல் ஜனங்கள் கற்றறிந்திருப்பார்கள். குணப்படுத்தும்சக்திதேவனிடமிருந்து வந்ததுஎன்பதை அவர்கள் புரிந்துக்கொண்டிருந்தார்கள்.

மற்றொரு நேரத்திலும், குணமடைந்த ஒரு நபர் தேவனை புகழ்ந்து பேசும் இதே சூழ்நிலை ஏற்பட்டது. அப்போஸ்தலர் 3ம் அதிகாரத்தில் யோவான் மற்றும் பேதுரு ஆலயத்திற்கு செல்லும் போது, வழியில் பிறவி முடவனான ஒரு மனுஷனை கண்டார்கள். "தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான்." என்று 3ம் வசனம் கூறுகிறது. அடுத்து முற்றிலும் எதிர்பாராத ஒரு காரியம் நடந்தது.

முடவனான அந்த மனுஷன் பிச்சை கேட்டபோது, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை, என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன், நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி வலதுகையினாலே அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது." (வசனம் 6,7) இந்த இரண்டு சம்பவங்களும் ஒரே விதமானது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பலவீனப்பட்டவருக்கும் குணப்படுத்து பவருக்கும் உடன் தொடர்பு இருந்தது. இயேசு அந்த ஸ்திரீயின் மேல் கைகளை வைத்தார். பேதுரு அவனுடைய வலது கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார். குணமடைந்த இருவருமே தேவனுக்கு மகிமைச் செலுத்தினார்கள். (அப்போஸ்தலர் 3:8, லூக்கா13:13)

**ஸ்திரீ ஒரு சித்திரம்**

வசனங்களில் காணப்படும் இது போன்ற சம்பவங்கள் பொதுவாக இன்னும் மேலான ஒன்றை சுட்டிக்காட்டுகிறது. ஸ்திரீயைப் பற்றிய சம்பவம் இந்த உலகத்தின் மனுக்குலத்தை எளிதில் சித்தரிக்கிறது. அந்த ஸ்திரீ தனது இளம் வயதில் நிமிர்ந்து நின்றிருந்தாள். பின்னர், அவள் அந்த பலவீனத்தால் ஆட்கொள்ளப்பட்டு, வளையாமல் நிற்க முடியாமல் போனது அதாவது நிமிர்ந்து நிற்க இயலாமல் போனது. "தேவன் மனுஷனைச் செம்மையானவனாக (upright) உண்டாக்கினார்" (பிரசங்கி 7:29) என்று பிரசங்கி கூறுகிறார். அதாவது உடல்ரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், ஆவிக்குரிய விதத்திலும் அவர் நேர்மையானவராக உண்டாக்கினார். ஆதாம் ஏவாள் ஒரு முறை பாவம் செய்து, தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோது, எல்லாம் மாற தொடங்கியது. கடந்த 6000 வருடங்களாக அவர்கள் பாவம் மற்றும் அதன் விளைவுகளின் பாரத்தினால் "குனிய" தொடங்கினார்கள்.

இவர்கள் குனிந்திருக்கும் இந்த நேரம் இருள் என்றும் குறிப்பிடப்படுகிறது, சொல்லர்த்தமாக அல்ல, ஆவிக்குரிய இருள். இன்னும் இருள் பூமியை மூடிக்கொண்டிருக்கிறது. (ஏசாயா 60:2) இந்த இருளைப் பற்றி எபேசியரில் குறிப்பிடப்படுகிறது. "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்." (எபேசியர் 5:8)

2கொரிந்தியர் 4:4 ம் வசனம் இதன் சரியான அர்த்தத்தை தருகிறது. ஆதாம் ஏதெனிலிருந்து வெளியேற்றப்பட்ட திலிருந்து வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, இந்த உலகின் தேவன் சாத்தான் என்பதை புரிந்துக்கொள்வது கடினமல்ல. (எபேசியர் 2:2)

கடந்த யுகங்கள் முழுவதிலும் தேவனுடைய நிலையை அபகரிப்பதற்கு சாத்தான் அயராது முயன்றுக் கொண்டிருக்கிறான். "நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே." என்று ஏசாயா 14:14 கூறுகிறார். மேலும் ஒரு கட்டத்தில் யேகோவா தேவனை துரத்த முயன்ற சாத்தானை தேவன் கொஞ்சம் கொஞ்சமாக அனுமதித்துள்ளார். அந்த ஸ்திரீ பலவீனத்தால் முடங்கிபோவதற்கு, சாத்தான் தேவனால் அனுமதிக்கப்பட்டான். ".. சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ...இவளை.." என்று லூக்கா 13:16 ம் வசனமும் உறுதிப்படுத்துகிறது.

ஏதேன் தோட்டத்தில், ஆதாம் மற்றும் ஏவாள் சாத்தானால் சோதிக்கப்படுவதற்கு தேவன் அனுமதித்தார். ஆதாமும் ஏவாளும் "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை" புசித்து, கீழ்ப்படிதலுக்கான இந்த சோதனையில் மிக பரிதாபமக தோல்வியுற்றார்கள். (ஆதியாகமம் 2:9,17, 3:1-6) ஏதேன் தோட்டத்தில் வியாதியும் இல்லை பலவீனமும் இல்லை. ஆதாமும் ஏவாளும் பரிபூரண மனுஷராக சிருஷ்டிக்கப்பட்டார்கள். இருப்பினும், அவர்கள் அறியாமையில் உண்டாக்கப் படாமல், மனப்பூர்வமாக பாவம் செய்ததால் மரணத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள்.

இந்த ஜோடி தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின், பல்வேறு நோய்கள் அவர்களின் வாழ்க்கைக்குள் நுழைந்தது. அந்த ஸ்திரீயின் நிலையைப் போல, சில நோய்களுக்கு நேரடியாக சாத்தானே காரணமாக இருக்கலாம்.

".. அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்" என்று பிரசங்கி 7:29 கூறிகிறார். "உபாயதந்திரங்கள்" என்பதற்கு "inventions" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இது "*chishshabown*" (ஷிஷாபௌன்) என்ற எபிரெய வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு சதி அல்லது திட்டமிட்ட சூழ்ச்சி என்று பொருள். இந்த வார்த்தை பெரும்பாலும், இராணுவ இயந்திரங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. மனுக்குலம் தங்கள் கஷ்டங்களை அன்பு மற்றும் புரிதலினால் தீர்க்க முயலாமல், அதற்கு பதிலாக இராணுவ வலிமையை தேர்வு செய்கிறார்கள். மனுக்குலம் பிரச்சினைகளை சரிசெய்ய, தங்களுடைய சொந்த ஞானத்தை சார்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் பிரச்சினைகள் தொடர்ந்து மோசமடைந்து வருவதையும் காண்கிறார்கள். அந்த ஸ்திரீயினிடமும் இதே காரியம் காணப்படுகிறது." அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்" (லூக்கா 13:11) அந்த ஸ்திரீ நிமிர முயற்சித்தாலும், அவளால் இயலவில்லை என்பது தெளிவாகிறது.

"ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்." என்று ரோமர் 8:22-23 கூறுகிறது. அந்த ஸ்திரீ தன்னை குணமாக்கும்படி இயேசுவிடம் கேட்கவில்லை என்றாலும், இயேசு அவளை அழைத்து, குணப்படுத்தினார். உடனே அவளால் நிமிர்ந்து நிற்க முடிந்தது.

அதேபோல, மனுக்குலம் இயேசுவால் அழைக்கப்படும். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5:28,29) "ஆக்கினை தீர்ப்பு" என்ற வார்த்தை, "*krisis* "(கிரைசிஸ்) என்ற கிரேக்க வார்த்தையின் தவறான மொழிபெயர்ப்பாகும். Thayer's Greek Lexicon படி இதற்கு "(1) ஒரு பிரிவு, பிரித்தல். (1அ) ஒரு சோதனை, போட்டி." என்று பொருள். கிரைசிஸ் (*Krisis*) ஒரு முடிவான தீர்ப்பை அல்ல ஒரு சோதனை காலத்தையே விவரிக்கிறது. இயேசு தனது பூமிக்குரிய இராஜ்யத்தின் ஆயிரம் ஆண்டு தீர்ப்பு காலத்தைப் பற்றி பேசுகிறார். இந்த இராஜ்யத்தின் போது தங்கள் பாவங்களையும் பலவீனங்களையும் வெல்லுபவர்களுக்கு நித்திய ஜீவன் வழங்கப்படும். ஜெயிக்காதவர்கள் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். (மத்தேயு 25:31-46, வெளிப்படுத்தல் 20:11-15)

இதுவரை வாழ்ந்த அனைவரும் உயிர்த்தெழுப்பப் படுவார்கள், அவர்கள் அனைவரும் கேட்காமலேயே குணமாக்கப்படுவார்கள். "நீதிமான்களும் அநீதிமான் களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்." (அப்போஸ்தலர் 24:15) என்று சொல்லுகிறது. தீமையான, பாவமுள்ள ஜனங்கள் ஏன் உயிர்த்தெழுதலில் வரவேண்டும்? இதற்கு ஏசாயா பதில் அளிக்கிறார், "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்."

(ஏசாயா 26:9) கிறிஸ்துவின் இராஜ்யம் தீங்கிழைக்கும் பாவிகளுக்கான நேரமாக இராமல், அவர்கள் நித்திய ஜீவனைப் பெறும்படியாக அவர்கள் தேவனுடைய நீதியைக் கற்றுக்கொள்வதற்கான நேரமாக இருக்கும். ஆதாமின் பாவத்தினால், தேவனுடைய சிருஷ்டிகள் அவரைவிட்டு விலகியிருந்தாலும், தேவன் அவர்களை நேசிக்கிறார்.

மனுக்குலத்தை மோசம் போக்காதபடிக்கு, சாத்தான் இந்த 1000 வருடம் அளவும் கட்டப்படுவான். (வெளிப்படுத்தல் 20:3) கற்றுக்கொள்வதற்கு அதிகமான காரியங்கள் இருந்தாலும், சாத்தானின் குறுக்கீடுகள் இல்லாததினால், அவைகளை கற்றுக்கொள்ள எளிதாக இருக்கும். பாவம் மற்றும் மரணத்தின் இந்த இரவு நேரம் முடிந்தவுடன், மனுக்குலம் ஒழுக்கத்திலும், ஆவிக்குரிய காரியங்களிலும் நேர்மையாக இருக்க கற்றுக்கொள்ளுவார்கள். (சங்கீதம் 30:5) "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா11:9) இதன் விளைவாக, "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரேமியா 31:34)

இயேசு அந்த ஸ்திரீயை குணமாக்கியபோது, குணமடைவதற்கு அவள் ஏதுவும் செய்யவில்லை. (அவள் அவரிடத்தில் வரவேண்டியதாக இருந்தது.) இது இயேசுவின் வேறு சில அற்புதங்களுக்கு முரணாக உள்ளது. சிலோவாம் குளத்தின் அருகில் இருந்த பார்வையற்ற ஒரு பிச்சைக்காரன், இயேசு சொன்ன அநேக காரியங்களை தொடர்ச்சியாக செய்யவேண்டியதாக இருந்தது. ஆதாமின் மீறுதலின் வழியாக வந்த பாவம் மற்றும் மரணத்தின் சாபத்திலிருந்து இந்த உலக மனுக்குலம் அகற்றப்படுவதை அதாவது எதுவும் செய்யாமல் நீக்கப்படுவதை, இயேசு அந்த ஸ்திரீயை குணப்படுத்தியதற்கு ஒப்பிடலாம்.

குணமடைந்த பின் அந்த ஸ்திரீ தேவனை புகழ்ந்ததைப் போலவே, மனுக்குலமும், அவர்கள் உயித்தெழுப்பப்பட்டு, அவர்களது உடல், மனம், ஆவி மற்றும் ஒழுக்க ரீதியான நோய்களிலிருந்து குணமடையும் போது, தேவனை நித்தியத்திற்கும் புகழ்வார்கள். நியாயத் தீர்ப்பின் நாளை நாம் நெருங்கி வருகையில், முழு மனித இனத்திற்காக, மனுக்குலமும் தேவனுடைய இரக்கம் மற்றும் அன்புக்காக அவரை புகழ்வதை நாம் (கிட்டத்தட்ட) கேட்கலாம்.

ஆறாயிரம் ஆண்டுகளாக சாத்தானை வெல்ல மனுக்குலம் வல்லமையற்றதாக இருந்தது. தேவனுடைய இராஜ்யத்தில், இதுவரை வாழ்ந்த அனைவருமே கர்த்தர் அவர்களை அழைக்கும் குரலைக் கேட்பார்கள். கல்லறைகளிலிருந்து வெளியே வருபவர்கள், தேவனுடைய நீதியான பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தால், அவர்கள் ஒரு பூரணமான சரீரம், சிந்தை மற்றும் ஒழுக்கமுள்ள சூழ்நிலையில் நித்தியத்திற்கும் வாழ்வார்கள். முதல் முறையாக, மனுக்குலம் நம்முடைய பரலோகத் தகப்பனுக்கு முன்பாக நீதியுடன் நின்று அவரை என்றென்றும் துதிப்பார்கள்.

" குணமடைய வேண்டுமா அல்லது குணமடைய வேண்டாமா ?" என்று இந்த கட்டுரை தொடங்கப்பட்டது. அது தான் கேள்வி. ஆனால் உண்மையில், இந்த கேள்விக்கு இடமே இல்லை. ஏனென்றால் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அதில் எல்லா மனிதர்களையும் குணமாக்கி, ஒவ்வொரு மனிதனுக்கும் தேவனையும் அவருடைய நீதியையும், அவருடைய மனித சிருஷ்டிப்புகளுக்காக அவர் கொண்டிருக்கும் அன்பையும் அறிந்துக்கொள்வதற்கு சாத்தானின் தாக்குதல்கள் அவர்களை தடைச்செய்யாத காலங்களை அவர்களுக்கு தருவார். அந்த ஸ்திரீயைப் போல, கிறிஸ்துவின் இராஜ்யத்தில், ஒவ்வொரு புருஷரும், ஸ்திரீயும், குழந்தையும் இயேசுவின் கைகளைப்பிடித்து, கற்றுக்கொள்வதன் மூலமும், தேவனுடைய நீதியான பிரமாணங்களைக் கீழ்ப்படிவதன் மூலமும் நிமிர்ந்து நின்று என்றென்றும் வாழ்வார்கள்.

"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவாகளாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5:28, 29).

மனுஷனுடைய இருதய கடினத்தைக் குணமாக்குதல்

# நீர் கோவையுள்ள மனுஷன்



**Erwin Kalinski**

"ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர் போஜனம் பண்ணும்படிக்குப் போயிருந்தார்.அப்பொழுது நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். என்ன செய்வாரோவென்று ஜனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள். இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு, அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார். அதற்கு உத்தரவுசொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று." (லூக்கா*14:1-6.*)

## நீர் கோவை என்றால் என்ன?

அதிகப்படியான நீர் குவிவதால், மென்மையான திசுக்களின் வீக்கம் ஏற்படுவதற்கு ஒரு பழைய சொல் - நீர்கோவை. பல வருடங்களுக்கு பின், இதய செயலிழப்பு காரணமாக ஏற்படக்கூடிய வீக்கத்தையும் நீர்கோவை என்றார்கள்.

(இந்த வியாதியின் இரண்டு விதங்களும் பாலஸ்தீனத்தில் காணப்படுகிறது. இந்த நோயின் இரண்டு வடிவங்களும் பாலஸ்தீனத்தில், அனசர்கா (*anasarca,*)எனப்படும் நீரினால் நிகழ்கின்றன, இது இதய அல்லது சிறுநீரக நோயைப் பொறுத்து, அடிவயிற்றில் மட்டுப்படுத்தப்பட்ட வடிவத்திலும், பொதுவாக கல்லீரல் தொற்றுநோய்களின் விளைவாகிறது. மனுஷனாகிய இயேசு இறுதியில் குணமடைந்த பரிசேயரின் வீட்டிலிருந்து வெளியே செல்லமுடிந்தது. (லூக்கா14:2)

பரிசேயரின் வீட்டிற்கு இயேசு ஏன் அழைக்கப் பட்டார் என்று வேத வசனங்கள் கூறவில்லை. பரிசேயர் இயேசுவை விரும்பியிருக்கலாம், அல்லது அவரைப் பற்றி மேலும் அறிய ஆர்வமாக இருந்திருக்கலாம். நீர்கோவையுள்ள அந்த மனுஷனும் அங்கு ஏன் இருந்தார் என்பது நமக்கு தெரியாது. அவர் வீட்டின் வேலைக்காரராக இருந்திருக்கலாம்.

தெய்வாதீனமாக, இயேசு ஓய்வு நாளைப் பற்றி சிறப்பான ஒரு ஒழுக்கரீதியான பாடத்தையும், அதனால் ஆயிரவருட யுகத்தைப் பற்றியும் பாடங்களை கற்பிக்க இந்த ஒரு சந்தர்ப்பத்தை, பயன்படுத்தினார். பாலஸ்தீனத்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள பெரியாவில் இயேசு இந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.

### குணப்படுத்தும் இயேசுவின் அற்புதங்கள்

இயேசு நான்கு விதமான அற்புதங்களை நிகழ்த்தினார் : பேய்களை விரட்டுதல், வியாதிகளை குணப்படுத்தல், இயற்கையைக் கட்டுப்படுத்தல் மற்றும் உயிர்த்தெழுதல். இயேசு அநேக அற்புதங்களை செய்தார், ஆனால் அவைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட வில்லை. "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்." (யோவான் 21:25) என்று யோவான் கூறுகிறார். இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட முப்பத்தாறு அற்புதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது, அவற்றில் ஏழு அற்புதங்கள் ஓய்வு நாளில் நிகழ்த்தப் பட்டது. அதில் 6 பிசாசுகளை விரட்டுதல், 18 வியாதிகளை குணப்படுத்துதல், 9 இயற்கையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் 3 உயிர்த்தெழுதல்.

### இயேசு மற்றும் ஓய்வு நாள்

இயேசு ஓய்வு நாளுக்கும் ஆண்டவர் என்பதால் ஓய்வு நாளில் அவர் அற்புதங்களைச் செய்தார். "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்." (மத்தேயு12:8 ) அவர் செய்த அற்புதங்கள் ஏசாயா 35:5,6வில் குறிப்பிடப்பட்டுள்ள அற்புதங்களின் ஒரு மாதிரி என்பதை இயேசு அறிந்திருந்தார்."அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்."

இயேசு ஓய்வுநாளில் நீர்கோவையுள்ள அந்த மனிதனை குணப்படுத்தியபோது, அவர் வேதபாரகர்களையும், பரிசேயரையும் எரிச்சலடைய முயற்சிக்கவில்லை. இயேசு பரிசேயரின் விதிகளை மட்டுமே மீறினார். தேவனுடைய ஓய்வு நாளை அவர் மீறவில்லை. (மத்தேயு5:20)

### இயேசு ஓய்வு நாளின் அற்புதங்கள் மற்றும் பரிசேயர்கள்

இயேசுவிற்கும் பரிசேயர்களுக்கும் இடையில் ஓய்வு நாளைக் குறித்து ஒரு அடிப்படை கருத்து வேறுபாடு இருந்தது. இதை Reprint 3316:4 ல் சகோ.ரசல் விவரிக்கிறார் "ஓய்வு நாள் மனுஷனுக்காக

ஏற்படுத்தப்பட்டது - மனுக்குலத்தின் நலனுக்காகவும், மனிதனின் உடல், மனம், ஒழுக்க ரீதியாக ஓய்வு, புத்துயிர் மற்றும் பலத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. அந்த நாளை விசேஷமாக அனுசரிக்கவேண்டும் என்று தேவன் விரும்பியதைப் போலவும், அந்த நாளின் குறிப்பட்ட நோக்கத்திற்காகவே மனிதனை சிருஷ்டித்தார் என்றும் பரிசேயர்கள் கண்ணோக்கினார்கள். இதனால் வெளிப்படையாகவே, அவர்கள் தவறினார்கள். நம்முடைய கர்த்தருக்கு நியாயப்பிரமாணத்தின் சரியான புரிதல் இருந்தது. ஆகவே அவர் அதை துல்லியமாக நிறைவேற்றினார்."

ஓய்வு நாளைப் பற்றி பரிசேயர்களுடன் நம்முடைய ஆண்டவருக்கு உண்டான தொடர்புகளைப் பற்றி சகோ. ரசல் Reprint 2434:1 ல் பின்வருவனவற்றை எழுதினார் : "மற்ற நாட்களை விட, ஓய்வு நாளை அவமதிக்கவேண்டும் என்றோ, அல்லது பரிசேயர்களை கோபமூட்டுவதற் காகவோ, நம்முடைய ஆண்டவர் ஓய்வு நாளில் பல அற்புதங்களை செய்தார் என்று நாம் சிந்தித்துவிட கூடாது. மாறாக, அந்த நாளில் குறிப்பிடத்தக்க அற்புதங்களின் செயல்திறன், பெரும்பாலும் பூமியின் மிக பெரிய ஓய்வு நாளாகிய ஆயிரவருட ஆட்சியில், மனுக்குலத்தை வந்து சேரும் நிஜமானதும், மிக பெரிதான அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் சுட்டிக் காட்டுவதை நாம் புரிந்துக் கொள்ளவேண்டும். "இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோவான் 2:11) மனிதனின் குணப்படுத்துதல் ஒரு அடையாளமாக இருந்தது

**மனிதனுடைய குணப்படுத்துதல் அடையாளமானது**

நீர்கோவையுள்ள மனுஷனை இயேசு குணப்படுத்தியது, நேரடியாக மட்டும் அல்ல அது அடையாளமாகவும் இருந்தது. பாவத்தின் விளைவுகளின் காரணமாக, மனிதனின் இதயம் குளிர்ந்து, கல்லாகவும் மாறிவிட்டது. மனிதனின் இதயத்தின் கடினத்தன்மையை சாத்தானின் மனதில் காணலாம். தலைமை வகிப்பதற்கான சாத்தானின் விருப்பம், அவனை பொய்களின் தந்தையாகவும், ஏவாளை வஞ்சித்து கீழ்ப்படியாமை மற்றும் மரண தண்டனையைப் பெற்று தந்து, முதல் கொலைகாரனாக அவனை வழிநடத்தியது. (யோவான் 8:44, ஆதியாகமம் 3:17-19) மிக உயர்வானவனாக மாறுவதற்கே அவன் கவனம் செலுத்தினான், மனிதன் மீது வரும் தண்டனையின் தாக்கத்தைக் குறித்து அவன் கவலையற்றவனாக இருந்தான். (ஏசாயா 14:14)

வீழ்ச்சிக்கு பின், சுயநலத்தின் மூலம் மனிதர்களின் இருதயங்களில் தீமையையும் கடினத்தன்மையையும் சாத்தான் தூண்டிவிட்டுக்கொண்டே இருக்கிறான். இதை காயீனிடத்தில் காணலம். தன்னுடைய சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று தேவன் காயீனிடம் கேட்டபோது, காயீனுடைய பதில் மிகவும் அயோக்கியதனமாக இருந்தது. "நான் என் சகோதரனுக்கு காவலாளியோ ?" (ஆதியாகமம் 4.9) ஜலப்பிரளயத்திற்கு முன், மனுஷரின் சுயநலம் வளர்ந்ததால், மனுஷரின் இருதயத்தின் கடினத்தன்மையும் வளர்ந்தது. மனுஷரின் கடினத்தன்மையை ஆதியாகமம் 6:5ல் காணலாம். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,"

அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேவன் இஸ்ரயேலுக்கு தம்முடைய பிரமாணத்தையும் உடன்படிக்கையையும் சீனாய் மலையில் கொடுத்தார். உபாகமம் 6:5-6ல் மோசே இந்த பிரமாணத்தின் சாரத்தை வெளிப்படுத்தினார். "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது." தேவன் இஸ்ரயேலர்களை தொடர்ந்து ஆசீர்வதிக்கும் படியாக, அவருடைய பிரமாணத்தை அவர்கள் தங்களுடைய இருதயங்களில் வைத்திருக்கும் படி தேவன் விரும்பினார். "அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும் படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளை யெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்." (உபாகமம் 5:29)

இருப்பினும், தேவன் துவக்கத்திலிருந்தே முடிவை அறிந்திருந்தார். பூமிக்குரிய ஆசீர்வதங்கள் இஸ்ரயேலரின் இருதயத்தை பெருமைக்கு வழிநடத்தும் என்றும், இதனிமித்தம் அவர்கள் கர்த்தருக்கு சேவை செய்வதை மறந்து விடுவார்கள் என்றும் மோசே மூலம் தேவன் தீர்க்கதரிசனம் உரைத்தார். "நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும் போதும், உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவரும்," (உபாகமம் 8:12-14)

இஸ்ரயேலரின் இருதயம் பெருமையாகவும், கடினமாகவும் மாறியதால், அவர்கள் இனி தேவனால் வழிநடத்தப்படுவதை விரும்பவில்லை. "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." (ஏசாயா29:13) இயேசு தம்முடைய நாளில் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை இஸ்ரயேலின் மேல் பயன்படுத்தி, அவர்களின் இருதய கடினத்தை உறுதிப்படுத்தினார். (மத்தேயு15:8, மாற்கு7:6) சூம்பிய கையுடைய மனுஷனை இயேசு குணப்படுத்தியபோது இந்த கடினத்தன்மை காணப்பட்டது. "அவர்களுடைய இருதய கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய், அவரைக் கொலை செய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனைப் பண்ணினார்கள்." (மாற்கு3:5,6)

## இராஜியத்தில் மனிதனின் இருதயத்தை குணப்படுத்துதல்

கிறிஸ்து தமது பூமிக்குரிய இராஜ்யத்தில் மனிதனின் இருதயத்தை குணமாக்குவதே, அவர் செய்யும் இறுதியான சிகிச்சையாக இருக்கும். மனிதனின் இருதயம் தேவனைப் போல் இருக்கவேண்டும். அவர் ஏற்றுக்கொள்ளும்படியாக, அவருக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். மனுக்குலத்திற்கான இந்த சோதனை மத்தேயு 25 ல் உள்ள ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகளின் உவமையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. செம்மறி வகுப்பின் தனிநபர்களின் இருதயங்கள் குணமடைந்ததினால், அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். மேலும் குறைவானவர்களுக்கு தயவோடும், அன்போடும் இதை நிரூபிப்பார்கள். "அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்." (மத்தேயு 25:37-40 ) அவர்களின் குணப்படுத்தப்பட்ட இருதயங்கள், அவர்கள் நீதியுள்ளவர்களாக மாறுவதற்கு உதவிச்செய்யும்.

மனிதனின் சுயாதீனத்தை தவிர்க்காமல், தேவன் கிறிஸ்துவின் வழியாக மனிதனின் இருதயத்தை எவ்வாறு குணமாக்குவார் ? முதலாவது அவனுடைய கல்லான இருதயம் மாற்றப்படும். "அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்" (எசேக்கியேல் 11:19) "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்." (எசேக்கியேல் 36:26) கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மகத்தான நன்மைகள், கல்லறையிலிருந்து மனிதர்களை எழுப்பி, அவர்களின் சுயநலத்திற்காக அனைத்து காரணங்களையும் அகற்றி, அவர்களின் ஒவ்வொரு தேவையையும் வழங்குவதன் மூலம் மனிதனின் கல்லான இருதயம் உடைக்கப்படும். "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும். அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்."(ஏசாயா 25:6,9)

இரண்டாவதாக, எல்லா மனிதர்களும் அவருடைய வார்த்தையையும், பிரமாணத்தையும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பார். "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா31:34) இந்த அறிவு மனிதனின் நடத்தையின் மாற்றத்திற்கு வழிவகுக்கும்."என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை;

கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா11:9) மனுக்குலம் தேவனுடைய வழிகளைக் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கும்."திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3)

மூன்றாவதாக, மனுக்குலம் தேவனுடைய பிரமாணத்தை புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாமல், அதை அவர்கள் இருதயத்தில் எழுதும் படியாக, தேவன் அவருடைய பரிசுத்த ஆவியை அவர்கள் மேல் ஊற்றுவார்.(யோயேல் 2:28) "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்." "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்."(எசேக்கியேல் 36:26,27)

புதிய உடன்படிக்கையின் கீழ் இந்த மூன்று செயல்களும், தேவனுக்கு எதிரான கலகக்காரர்களாக இருந்த மனுக்குலத்தை அவருடைய ஜனங்களாக மாற்றும். "அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 31:33) "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு," (எரேமியா 32:38-39)

இருதயத்தின் இந்த மாற்றம் இஸ்ரயேலையும், முழு மனுக்குலத்தையும் மீண்டும் தேவனுடைய பூமிக்குரிய புத்திரர்களாக மாறுவதற்கு வழிநடத்தும். அவர்கள் ஒவ்வொருவரின் இருதயங்கள் ஒருவரோடு ஒருவர் பிணைக்கப்பட்டிருக்கும். இவர்கள் அனைவரும், தங்கள் தேவனுடைய அகாபே அன்பிலும், தேவனுடைய சாயலிலும், அவருடைய அன்பான குமாரனுடைய சாயலிலும் இணைக்கப்பட்டிருப்பார்கள்.